846


24 FEB 1958
MADRAS

# தென்றல்

ஆசிரியர் — கண்ணதாசன்

உள்நாடு (இலங்கை உட்பட) விலை 16 புதிய காசு | வெளிநாடு 20 காசு | அலுவலகம்: 'தென்றல்' சென்னை-6.

| மலர் 4 | சென்னை | 22-2-58 | சனிக்கிழமை | இதழ் 32 |
|---|---|---|---|---|



## அதிசய மனிதர்!

சமீபத்தில் தமிழ் உலகம் ஒரு மாபெரும் தமிழ்ப் பெரியாரை இழந்தது. அந்தத் தமிழ்ப் பெரியாரது அறிவுத்திறனையும் தமிழ்ப் பற்று தலையும் ஊன்றிக் கவனித்தவர்கள் தமிழ் தினப் பத்திரிகைகள் அவருக்குரிய மரியாதையைத் தரவில்லையென்றே கருதுவர். அவரது மறைவுச் செய்தியை எல்லாத் தினப்பத்திரிகைகளும் சுருங்கிய அளவில் வெளியிட்டு விட்டன. தமிழார்வளர்கள் வழக்கமாகவே ஒதுக்கித் தள்ளப்பட்டு வருகிறார்கள். மறைந்த ஏ. வி. இராமன் அவர்கள் தமிழ்ப்பற்றுக் கொண்டிருந்த காரணத்தால்தான் தினப்பத்திரிகைகளால் ஒதுக்கப்பட்டாரோ என்னவோ!

ஆனால் திராவிட சமுதாயம் அவரைப் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறது. இலை மறை காயாக இருந்துகொண்டு தமிழுக்கு அவர் செய்த சேவைகள் அளவிறந்தன. அவர் பல ஆண்டுகளாக முயன்று தமிழ்-ஆங்கில அகராதி ஒன்றைத் தயாரித்தார். அவர் மறையும் தருணத்தில் அந்த அகராதி முக்கால் திட்டம் உருவாகி இருந்தது. பல ஆங்கிலச் சொற்களுக்கு நேரடியான தமிழ் சொற்களை நாம் புதிதாக ஒன்றும் உருவாக்க வேண்டியதில்லை என்றும் பழந் தமிழ் இலக்கியங்களிலேயே அத்தகு சொற்கள் இருக்கின்றன என்றும் அவர் வாதாடி வந்தார். அவர்எழுதிய அகராதியில் அவற்றைக் குறிப்பிடுகிறார்.

நான் அவரோடு பேசுவதற்கு இரண்டொரு சந்தர்ப்பங்களைப் பெற்றிருந்தேன். அப்போது, அவர் இதுபற்றிக் குறிப்பிட்டார். உதாரணமாக '**அந்தரங்கக் காரியதரிசி**' என்ற வடமொழிச் சொல் தமிழில் வெகு காலமாகப் புழங்கி வருகிறது. இந்தச் சொல்லுக்கு தமிழ் இலக்கியத்தில் 'வாய் கேட்போன்' என்றொரு சொல் இருப்பதாக அவர் கூறினார். தமிழை வளர்க்க வேண்டிய விதம்பற்றி 'தினமணி'ப் பத்திரிகையில் அவர் ஒரு தொடர் கட்டுரை எழுதி வந்தார். அதில் பல ஆங்கிலச் சொற்களுக்கு தனித் தமிழ் சொற்கள் சிலவற்றை அவர் ஆக்கிக் காட்டியிருந்தார்.

1954-ல் அவர் எழுதிய மேற்படி தொடர் கட்டுரையை அடுத்த இதழிலிருந்து நாம் வெளியிடுகிறோம். இந்தக் கட்டுரை மூன்று வாரத்திற்குள் தென்றலில் முடிந்துவிடும் என்றாலும் சுருங்கிய அளவிலேயே தமிழர்கள் இதில் பெறக்கூடிய பலன் அதிகம்.

ஏ. வி. இராமன் அவர்கள் இன்னும் சில காலம் இருந்திருப்பாரானால் தமிழ் உலகம் பெரும் பயன் பெற்றிருக்கும். அவரது செல்வரும் வழக்கறிஞருமான வி. பி. இராமன் அவர்கள் தி. மு. கழகத்திற்குக் கிடைத்த மணிகளில் ஒன்றாவார். இன்முகமும் இடையறாத் தமிழ் உணர்வும், நற்பண்பும், நட்புணர்வும் நாட்டுப் பற்றும் கொண்டு விளங்கும் வி. பி. இராமன் அவர்களின் தந்தையார் மறைவு குறித்து நமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

—கண்ணதாசன்

**பாத்திரப் படைப்பு : 1**

## ★ முன்னுரை

**நா**டகத்துக்காயினும் சரி, புதினத்துக்காயினும் சரி, கதையைத் தேடி அலைவதைவிட ஒழுங்கு முறையான சில பாத்திரங்களை ஆக்கிக்கொள்வது சுவை தரும். "சில பாத்திரங்களின் குணச்சித்திரங்கள் சேர்ந்துதான் ஒரு நல்ல கதையை உருவாக்குகின்றன" என்று ஒரு நாடகாசிரியன் சொன்னதாக நினைவு. பல்வேறு மனித குணங்களால் இழுத்துச் செல்லப்படும் உலகம், ஒரு சுவையான நாடக மேடையாக இருந்து வருகிறது. இந்த நாடகத்தின் கதையை மனித குணங்கள்தான் உருவாக்குகின்றன. ஆகவே, கதையை இப்படி ஆரம்பித்து இப்படி முடிக்கவேண்டும் என்று திட்டமிட்டுக்கொள்கிற ஆசிரியனைவிட, பாத்திரங்களின் குணச்சித்திரங்களையே முக்கியமாகக் கொள்ளும் ஆசிரியனே வெற்றி பெறுகிறான்.

இன்றைய நாடக, புதின ஆசிரியர்களில் பாத்திரங்களின் குணச்சித்திரங்களைத் தப்பாமல் கொண்டு வருகிறவர்கள் மிகவும் குறைவு. இது மிகவும் பொறுப்பு வாய்ந்த வேலை. படைக்கின்ற பாத்திரத்தைப்பற்றிய முழு வடிவம் மனதில் இருக்கவேண்டும். இதில் அனுபவமும் தேவைப்படுகிறது. கண்டு, கேட்டு, அனுபவித்த ஒரு வடிவத்தைக் கற்பனை செய்யும்போதுதான் இது கை கூடி வருகிறது. சொல்லப் போனால், ஆசிரியனுக்கு ஒவ்வொரு பாத்திரத்தினிடத்திலும் தொடர்பு இருந்தால்தான் குணச்சித்திரம் முழுமை பெறும். 'அடித்தான் பிடித்தான்' கதைகளில், துப்புரவாக எந்தப் பாத்திரத்துக்கும் ஒரே குணம் இருப்பதில்லை. மனோதத்துவத்தில் வகைப்படுத்தப்படும் பாத்திரங்கள் மட்டுமே ஒரே குணத்தோடு நிற்கின்றன; அந்தக் குணத்தின் வளைவு சுழிவுகளைப் பொருத்தமான முறையில் ஏற்று நடத்துகின்றன.

நானறிந்தவரையில் மேலைநாட்டில் **ஷேக்ஸ்பியரும்**, கீழைநாட்டில் **சரத்சந்திரர், பங்கிம்சந்திரர்** போன்றவர்களும், குணப்படைப்பில் வல்லவர்களாவார்கள்.

இந்தத் தொடர் கட்டுரை பல்வேறு ஆசிரியர்களின் படைப்புகளில் ஒவ்வொன்றை எடுத்து விளக்கும்.

முதலாவதாக, சரத்சந்திரர் எழுதிய '**சந்திரநாத்**' என்னும் புதினத்தின் நாயகி '**சரயூ**' இங்கே அறிமுகப்படுத்தப்படுகிறாள்.



# சரத் சந்திரரின் 'சரயூ'

**வ**ங்க நாட்டில் ஒரு கிராமத்தில் வாழ்ந்த பிராமண விதவை **சுலோசனா**. அவள் மகள் **சரயூ**. சரயூ மூன்று வயதுக் குழந்தையாக இருக்கும்போது அவள் தந்தை இறந்துவிட்டார். அவள் ஐந்து வயதுகுழந்தையானபோது இளம் வயதில் சுலோசனாவைக்காதலித்த **ரக்கால் தாஸ் பட்டாச்சாரியா** என்பவன் சுலோசனாவோடு தொடர்புகொள்ள ஆரம்பித்தான். மதுரா நகருக்கும், பிருந்தாவனத்துக்கும் சுலோசனாவையும், குழந்தை சரயூவையும் அழைத்துக்கொண்டு போய் வாழ்க்கை நடத்தினான். அங்கிருந்து, பிறகு அவர்களைக் காசிக்குக் கூட்டி வந்தான். காசியில் குடித்துக் கூத்தாடி, சுலோசனாவின் நகைகளைப் பறித்துக்கொண்டு அவன் ஓடிவிட்டான் சுலோசனா குழந்தை சரயூவோடு காசியில் பிச்சை யெடுக்கத் தொடங்கினாள்

காசியைச் சேர்ந்த **ப..டா அரிதயால் கோஷால்**, சுலோசனாவையும் சரயூவையும் வீட்டுக்குக் கூட்டிக்கொண்டு போனார். அப்போது சரயூவுக்குச் சுமார் எட்டு வயதிருக்கும்.

இந்த நிலையில் சரயூவின் கதை ஆரம்பமாகிறது.

வங்க நாட்டின் வேறொரு கிராமத்திலிருந்து காசிக்கு வந்து அரிதயால் கோஷாவின் வீட்டில் தங்கிய பணக்கார வாலிபன் **சந்திரநாத்**, சரயூவைக் கண்டு விரும்பி அந்தப் பிஞ்சுப் பருவத்திலேயே அவளை மணம் முடித்துக்கொண்டு தன் கிராமத்திற்கு அழைத்துச் செல்கிறான். மணம் முடிக்கும்போது சரயூவின் பூர்வீகத்தைப்பற்றிய முழுக் கதையும் அவனுக்குத் தெரியாது.

கணவனின் கிராமத்திற்குச் சென்ற சில ஆண்டுகளில் சரயூ பூப்படைகிறாள். கணவனோடு வாழ்க்கையைத் தொடங்குகிறாள்.

-இந்த நிலையில் குடிக்காரன் ரக்கால்தாஸ் பட்டாச்சாரியா விதவை சுலோசனாவைக் காசி பண்டா வீட்டில் கண்டு, சரயூ பெரிய இடத்தில் வாழ்க்கைப்பட்டிருப்பதைத் தெரிந்துகொள்கிறான். வங்காளிகள் கடுமையான சாதிப் பற்றுக்கொண்டவர்கள். கெட்டுப்போன பெண்களின் குழந்தைகளும் பட்டுப்போக வேண்டுமென்பதே அவர்களின் முடிவு. இதைத் தனக்குத் துணையாக்கிக்கொண்ட ரெக்கால்தாஸ் சுலோசனாவைப் பயமுறுத்திப் பணம் பறிக்க விரும்புகிறான். இல்லையென்றால் சரயூவின் வாழ்க்கையைக் கெடுத்துவிடுவேன் என்று பயமுறுத்துகிறான். இதை அரிதயால் கோஷால் பார்த்துவிடுகிறார். அவனை மிரட்டுகிறார். அவன், திருப்பி, அவரையே மிரட்டுகிறான். கெட்டுப்போன விதவையை வீட்டில் வைத்திருந்ததால் அவரையும் சாதியை விட்டு விலக்குவார்கள் என்று பயமுறுத்துகிறான். இறுதியில் சுலோசனா வீட்டை விட்டுத் துரத்தப்படுகிறாள். ரக்கால்தாஸ், சரயூ வாழும் கிராமத்திற்கே போய் கலகம் புரிகிறான். கர்ப்பிணியான சரயூ வீட்டை விட்டே துரத்தப்படுகிறாள். காசிக்குத் தன் தாயைப் பார்க்க வருகிறாள். தாய் மறைந்துவிட்டதைத் தெரிந்துகொள்கிறாள். தங்குவதற்கு இடம் கேட்கிறாள். அவளை அன்போடு வளர்த்த அரிதயால் இப்போது கேவலமாகப் பேசிவிரட்டுகிறார். அடிக்கடி அரிதயால் வீட்டுக்கு வருபவரும், சரயூவுக்கு ஏற்கனவே அறிமுகமானவரும், சதுரங்கப் பிரியரும் சந்தர்ப்பங்களில் சாதியைத் துச்சமாகக் கருதுபவருமான **கைலாஸ் சித்தப்பா** என்பவர் காசியிலேயே இருந்த தன் வீட்டுக்குச் சரயூவை அழைத்துச் செல்கிறார். தன்னந்தனியாக இருந்த அவர் சரயூவைத் தன் மகளைப் போல் வளர்க்கிறார். சரயூவுக்குப் பையன் பிறக்கிறான்.

பிறகு இரண்டொரு ஆண்டுகளில் சந்திரநாத் மனம் மாறி மனைவியைத் தேடி அலைந்து இறுதியில், குழந்தையை முதலில் சந்தித்து பிறகு மனைவியைச் சந்தித்து அழைத்துக்கொண்டு திரும்புகிறான்.

-கதையின் இரத்தினச் சுருக்கம் இது.

இந்தப் புதினத்துக்கு சந்திரநாத் என்று பெயர் வைத்திராமல் 'சரயூ' என்று பெயர் வைத்திருந்தால் மிகவும் பொருத்தமாக இருக்கும். சரயூவின் குணச்சித்திரத்தை அவ்வளவு அழகாகக் கையாண்டிருக்கிறார் சரத்சந்திரர்.

ஏழ்மையும் அடக்க ஒடுக்கமும் இனிய சுபாவமும் கொண்ட பத்தினிப் பெண்ணாக சரயூ காட்சியளிக்கிறாள்.

சந்திரநாத் சரயூவைச் சந்திக்கும்போது அவள் காய்கறி நறுக்கிக்கொண்டிருக்கிறாள். சந்திரநாத் அவள் அருகில் சென்று "சரயூ" என்று அழைக்கிறான். சரயூ, நாணிக்கோணிக் கொண்டு "என்ன" என்கிறாள். சந்திரநாத் அவளோடு பேச்சுக் கொடுக்கிறான். அரிதயால் வீட்டில் சமையற்காரியாக இருக்கும் அவளைத் தன் வீட்டுக்குச் சமையற்காரியாக அழைக்கிறான். அவள், "அம்மாவிடம் கேட்டுச் சொல்கிறேன்" என்கிறாள். ஆனால், விரைவிலேயே அவளை வீட்டுக்காரியாக ஆக்கிக்கொண்டு காசியிலிருந்து கிராமத்திற்குப் புறப்படுகிறான் சந்திரநாத்.

புக்ககத்திற்குப் புறப்படும்போது தாயைப் பிரியமுடியாமல் சரயூ அழுகிறாள். இங்கே தாயையும் மகளையும் சரத்சந்திரர் காட்டும் விதம் உருக்கமாக இருக்கிறது. இருவரிடத்தும் அனுதாபத்தை ஏற்படுத்துகிறது.

ஏழை சரயூ, மாளிகைக்குள் நுழைகிறாள். மாளிகையைப் பார்த்து பிரமிக்கிறாள். "இவ்வளவு பெரிய இடத்தைச் சேர்ந்தவர், என் மீது எவ்வளவு கருணை வைத்துவிட்டார்" என்று மகிழ்கிறாள்.

இப்போது சரயூ பெரியவளாகிவிட்டாள். கணவனுக்குப் பணிவிடை செய்வதையே பெரிதாகக் கருதுகிறாள். கணவனுக்குத் தன்னை ஒரு வேலைக்காரியாக அர்ப்பணித்துக்கொள்கிறாள். அவன் அவளிடத்தில், ஆழமானதும் முழுமை பெற்றதுமான சுகத்தை எதிர்பார்க்கிறான். அவளோ பயந்து பயந்து சாகிறாள். "ஏன் பயந்து பயந்து சாகிறாய்?" என்றே ஒருநாள் அவன் கேட்கிறான்.

"நீங்கள் இறைவனுக்குச் சமம்; நான் வெறுக்கத்தக்கவள்! நீங்கள் அடைக்கலம் கொடுத்தவர்; நான் அண்டி வந்தவள். நீங்கள் கொடையாளி; நான் பிச்சைக்காரி" என்கிறாள்.

பணம் படைத்த மாளிகைக்குள் புகுந்ததும் இயற்கையாகப் பெண்களுக்கு ஏற்படுகிற திமிரான சுபாவம் சரயூவுக்கு ஏற்படவில்லை. கை கொடுத்தவனுக்கு நன்றி தெரிவிப்பதற்காகவே அவள் அந்த வீட்டில் தங்கியிருக்கிறாள். கணவரிடம் அவள் கொண்டிருக்கும் காதல், 'பூமிக்குள் ஓடும் நீரோடையைப்போல் அவளது இதயத்தின் ஆழமான பாகத்தில் மெல்ல ஓடிக்கொண்டிருந்தது.'

கணவன் அருகில் நிற்கும்போதெல்லாம் அவள் கண்களில் கண்ணீர் வழிகிறது ஒருவனிடமே ஒன்றி தன் முழு இதயத்தை அவனுக்கு ஒப்படைத்து நன்றி விசுவாசத்திற்காகவே வாழும் அந்த ஏழை, தன்னைப் பற்றிய 'தாழ்வு மனப்பான்மை'களை விட்டுவிடாமலேயே வைத்திருக்கிறாள். தன்னிடத்தில் அவளுக்கு ஆசையில்லையோ என்று கணவன் நினைக்கிற அளவுக்கு பணிவும் பக்தியும் காட்டுகிறாள். ஒரு விநாடிகூட கணவனுக்குமேல் உயர்ந்தவளாகத் தன்னைக் காட்டிக்கொள்ளாமல் தான் இருக்கவேண்டிய இடத்தை எச்சரிக்கையாகக் கணித்துக்கொள்கிறாள்.

அவளிடத்திலே பொறாமை கொண்டவர்களும் அந்த வீட்டில் இருக்கிறார்கள். அந்தஸ்தை அதிகப்படுத்திக் காட்டிக்கொள்ளும்போது தானே பொறாமைக்காரர்கள் தோன்றுவார்கள்? ஆனால் ஏழை சரயூ அந்த மாளிகையில் ஒரு ஏழையாகவே வாழ்ந்தும் பொறாமைக்காரர்கள் தோன்றினார்கள்.

மனைவி அடையக்கூடிய செல்வங்களில் கணவன் காட்டும் அன்பே பெருஞ்செல்வம். அதை அவள் முழுவதும் பெற்றிருந்தாள். அதனால் அவளுடைய நடையுடை பாவனைகளில் தோன்றிய ஏழ்மை பயனற்றுப் போயிற்று.

அந்த வீட்டிலிருந்த சந்திரநாத்தின் அத்தை **அரிகாலிக்கு** சரயூவின்மீது பொறாமை அதிகம். தாய் தந்தையரை இழந்த சந்திரநாத்தின் குடும்பத்தை அவளேதான் கவனித்துக்கொண்டிருந்தாள். சரயூ அவளுக்குப் போட்டியாக வந்துவிட்டது போல் ஒரு பிரமை. சரயூவின் உள்ளார்ந்த பணிவினால்கூட இந்த பிரமையைத் தீர்க்கமுடியவில்லை.

சரத்சந்திரரின் படைப்பில் இது மிகவும் அற்புதமானது. அத்தை அரிகாலியும், மாமா **விரஜகிஷோரும்** சரயூவுக்கு அடுத்தடுத்த இடங்களைப் பிடித்துக்கொள்கிறார்கள். சரயூ, எப்படி நன்றியுள்ள வேலைக்காரியாகக் காட்சியளிக்கிறாளோ அப்படியே பொறாமையும், சபலமும் திடீர்க் கோபமும் கொண்ட பெரிய

**கண்ணதாசன்**

இடத்து மாமியாக அத்தை அரிகாலி காட்சி அளிக்கிருள். அதற்காக அவளை சரத்சந்திரர் கடுமையான வில்லியாக்கிவிடவில்லை. அவளும் 'மனித' குணங்களோடு போராடுகிருள். மாமா விரஜகிஷோர் மனைவிக்குப் பயந்தவர்; ஆனுல் மிகவும் நல்லவர். கடைசிவரைக்கும் அவருக்கு வீரமோ, ரோஷமோ ஏற்படவில்லை.

சந்திரநாத்திற்குசரயூவிடம்அளவு கடந்த பிரியம் ஏற்பட்டுவிட்டது. அவனிடம் சரயூ நடந்துகொள்ளும் முறையைப் படிக்கும்போது ஒரு நல்ல வங்காளிக்கும் சரி, தமிழனுக்கும் சரி அவளொரு இலட்சிய மனைவியாகக் காட்சியளிக்கிருள். படிப்பும், பக்குவமுமற்ற பயந்த சுபாவம் பெண்மையின் மென்மையை ஒளிவிடச் செய்கிறது. சரிக்குச் சரியாகப் பதில் சொல்லக்கூடிய புதுமைப் பெண்ணே சமூகத்தின் தேவை என்று கருதுபவர்கள்கூட சரயூவைப்போல ஒரு மனைவியையே அடைய விரும்புவார்கள். தன் சகல சுகங்களையும் கணவனிடம் ஒப்படைத்துவிட்டு ஒவ்வொரு காரியத்திற்கும் அவனது கட்டளையையே எதிர்நோக்கிக் கிடக்கும் சரயூ, மிகவும் அபூர்வமான பிறவி. கணவன் செய்யும் காரியமெல்லாம் தனக்கும் சேர்த்துச் செய்வதுதான் என்று அவள் முடிவு கட்டுகிருள். தானுகத் தனியாகச் சிந்திப்பதற்கு உலகத்தில் எதுவுமில்லையென்று கருதுகிருள். இது சில நேரங்களில் சந்திரநாத்திற்குச் சங்கடமாகக்கூட இருக்கிறது. அளவு கடந்த அன்பில் சுகம் தரக்கூடிய கோபம் பிறப்பதை சந்திரநாத்தும் சரயூவும் சந்திக்கும் போதெல்லாம் படம் பிடித்துக் காட்டுகிருர் சரத்சந்திரர்.

சந்திரநாத்தின் உறவினர்கள் அவனிடம் விரோத பாவம் காட்டிஞல் தானே அதற்குக் காரணம் என்று சரயூ சஞ்சலப்படுகிருள். வழக்கமான உலக நடவடிக்கையைப்போல் இந்த சுபாவத்திற்குரிய மரியாதை அந்த மாளிகையிலும் கிடைக்கவில்லை. சரயூவின் தாயைப் பற்றிய உண்மைகளை குடித்துவிட்டு வந்த ரக்கால்தாஸ் பட்டாச்சாரியா மிகைப்படுத்திக் கூறியதும் எல்லோரும் சரயூவை வெறுக்கிருர்கள். அத்தை அரிகாலி இந்தச் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்திக் கொள்கிருள். சந்திரநாத்தின் சித்தப்பா **மணிசங்கரும்**, கோபக்காரராகிருர். "சாதி கெட்டுவிட்டது" என்று கூக்குரல் எழுகிறது. எல்லோரும் சந்திரநாத்தைத் தூண்டுகிருர்கள். அவன் மனதில் கொஞ்சம் கொஞ்சமாக நஞ்சைக் கலக்கிருர்கள். சந்திரநாத் ஒருவனைத் தவிர வேறு யாரிடமிருந்தும் சரயூ அன்பை எதிர்பாக்கவில்லை. அவளோடு வாழ்க்கை நடத்திய சில ஆண்டுகளிலேயே அவளைப் போன்ற ஒரு பெண் உலக முழுவதும் தேடிஞலும் கிடைக்கமாட்டாள் என்ற முடிவுக்கு வந்திருந்த சந்திரநாத்தோ, இப்போது இளகத் தொடங்குகிருன்.

சரயூ உத்தமி என்பதில் அவனுக்குச் சந்தேகமில்லை. ஆனுல் தன் தாயைப்பற்றிய ரகசியத்தைத் தன்னிடம் ஏன் மறைத்தாள் என்று சிந்திக்கத் தொடங்குகிருன். அங்கு நடப்பதையெல்லாம் முழுவதும் அறிந்தும்கூட சரயூ சலனமின்றி இருக்கிருள். செல்வத்திலும் சுகபோகத்திலும் அவள் சிறிதுகூட பிடிப்பை ஏற்படுத்திக்கொள்ளவில்லை. ஆசையை வளர்த்துக் கொண்ட பிறகு ஆசைக்குரிய பொருள் கை நழுவிஞல சஞ்சலம் பிறக்கும். அவள் எப்போதும் ஒரே மாதிரி இருக்கிருள். கணவன் ஒருவனைத்தான் நம்பிக்கொண்டிருக்கிருள். அவன் தன்னைக் கைவிடமாட்டான் என்ற பரிபூரண உணர்ச்சி இருக்கிறது. அதனுல் ஊர்ப்பேச்சில் அவள் கலங்கிவிடவில்லை.

ஆனுல் சந்திரநாத் இப்போது மாறிவிடுகிருன்; கோபத்தோடு வருகிருன். விளக்கை ஏற்றி வைத்துவிட்டு உட்கார்ந்த சரயூ, கணவன் வந்ததும் மரியாதையாக எழுந்து நிற்கிறாள். அவன் படபடவென்று கேள்விகளைத் தொடுக்கிருன். அடக்கத்தோடு உள்ளதை உள்ளபடியே சொல்லுகிருள் சரயூ. உண்மையைச் சொன்ஞல் விட்டுவிடுவார்கள் – என்று உண்மை பேசும் குற்றவாளிக்கு தண்டனை வாங்கிக்கொடுக்கும் போலீஸ்காரனைப்போல், அவள் உண்மைகளைக் கூறிய பின்பும் அவளைத் தண்டிக்க விரும்புபவன் போலவே சந்திரநாத் காணப்படுகிருன்.

"என்னை அதலபாதாளத்தில் தள்ளிவிட்டாய். நீ பெரிய பாவி" என்கிருன்.

சரயூவின் கண்களிலிருந்து மளமளவென்று கண்ணீர் வருகிறது. அவள் தலை குனிந்தபடியே நின்றுகொண்டிருக்கிருள்.

'இதற்கொரு வழிசொல்!'–என்று கத்துகிருன் அவன்.

"அதையும் நீங்களே சொல்லுங்கள்!"–என்கிருள் சரயூ.

"உன்னை விட்டுவிட எனக்குத் துணிவுமில்லை; ஆனுல் உன்னிடத்தில் எனக்கு நம்பிக்கையுமில்லை!" என்கிருன் சந்திரநாத்.

கர்ப்பிணியான சரயூவின் பரிதாபமான வெளுத்த முகத்தில் ஒருவிதமான சிவப்புப் படருகிறது. நீர் நிறைந்த அவளது மங்கிய கண்கள் பிரகாசிக்கின்றன.

"உங்களுக்கு என்னிடம் நம்பிக்கை இல்லையா" என்று கேட்கிருள்.

"இல்லை, நீ எல்லாம் செய்வாய்" என்கிருன் அவன்.

"நான் உங்களுக்கு என்ன வேண்டும் என்பது உங்களுக்குத் தெரியும். 'எனது முகத்தை நன்ருகப் பார்' என்று நீங்கள் ஒரு தடவைசொன்னீர்கள். 'ஒருதடவை என் முகத்தைப் பாருங்கள்' என்று நான் இப்பொழுதுசொல்லுகிறேன். நான் களங்கமுள்ளவளா? சரி, நான் ஒரு வழி சொல்லுகிறேன் கேட்பீர்களா?"

"இம்! கேட்கிறேன். சொல்லு!! என்ன வழி?"

"நான் நஞ்சைத் தின்றுவிட்டால் எல்லாம் சரியாகிவிடாதா?

சந்திரநாத், சரயூ எங்கும் ஓடிப் போகாவண்ணம் கையைப் பிடித்துக்கொள்கிருன். ஆனுல் என்ன கேள்வி கேட்கிருன்?

"ஆம், அது நல்ல வேலைதான், நீ நஞ்சைத் தின்னமுடியுமா?"

சலனமின்றி 'ஓ, தின்பேன்' என்கிருள் சரயூ.

• மிகவும் எச்சரிக்கையுடன் யாருக்கும் தெரியாமல் நஞ்சைத் தின்றுவிடும்படியும், அதையும் அப்பொழுதே செய்துவிடும்படியும் கூறிய சந்திரநாத், அங்கிருந்து எழுந்து போக முயலுகிருன். அப்போதும் அந்தப் பரிதாபத்திற்குரியவள் சாகப் போகும் தன்னை ஆசிர்வதிக்கும்படி கேட்டுக்கொள்கிருள்.

> அடுத்த இதழில்—
> முன்ஷியின்
> **'மிருணுலவதி'**

"உன்னுடைய சவம் மயானத்தில் வைத்து எரிக்கப்பட்டதும் அந்தச் சாம்பலை ஆசிர்வாதம் செய்கிறேன்" என்கிருன் அவன்.

அதையும் அவள் மகிழ்ச்சியோடு ஏற்றுக்கொள்கிருள்.

தன் கணவனுக்கு தன்னுடைய தற்கொலையின் மூலம் சிறிதுகூடச் சஞ்சலம் ஏற்படக்கூடாது என்பதற்காக, ஒரு கடிதம் எழுதித் தலையணையின் கீழ் வைத்துவிடுவதாகவும், தான் இறந்ததும் அதை எடுத்து ஊராருக்குக் காட்டிவிடும்படியும் கூறுகிருள். தலை, தரையில் படும்படி கணவனை ஒரு முறை வணங்குகிருள். அவன் கால்களைத் தொட்டு நெற்றியில் வைத்துக் கொள்கிருள். பிறகு விளக்கை எடுத்து வந்து கணவன் முகத்தை ஒருமுறை நன்ருகப் பார்த்துக் கொள்கிருள். சலனமின்றி அவனுக்கு விடை கொடுத்துவிட்டு நஞ்சைஉண்பதற்குத் தயாராகிருள்.

அவள் சாவதற்கு இப்போது தயார். ஆனுல் அவள் வயிற்றிலிருந்த சிசு, உள்ளிருந்தே அவளை உதைக்கிறது "நான் சாவது சரி, இந்தக் குழந்தையை ஏன் கொல்ல வேண்டும்" என்று சிந்திக்கிருள். அந்தச் சிந்தனை முடிவதற்குள்ளாகவே 'மனிதன்' சந்திரநாத் உள்ளே நுழைகிருன். "நீ சாப்பிடாதே! சாகாதே!" என்று சத்தம் போடுகிருன். அவளைச்சேர்த்துத் தன் மார்போடு அணைத்துக்கொள்கிருன்.

இங்கே சரத்சந்திரர் ஆண்களின் சபலச் சித்தத்தையும் அழகாக உறுதிப்படுத்துகிருர்.

மறுநாள் சரயூ தன் கணவனுக்கு ஆறுதல் கூறி அவனை இன்னெரு மணம் முடித்துக்கொண்டு வாழும்படி சொல்லிவிட்டு அவன் கொடுத்த சாவிக் கோர்வையை அவனிடமே திருப்பிக் கொடுத்து, வரப் போகும் புதிய மனைவியிடம் அந்தச் சாவிக் கோர்வையைக் கொடுக்கும்படி கூறிவிட்டு, கணக்கப்பிள்ளையின் துணையோடு வெளியேறுகிருள்.

பிறகு அவள் அரிதயால் வீட்டுக்குப் போவதையும் கைலாஸ் சித்தப்பா அடைக்கலம் கொடுப்பதையும் குழந்தை பிறப்பதையும் சந்திரநாத் மனம் மாறி மறுபடியும் வருவதையும் குடும்பம் ஒன்றுபடுவதையும் கதைப் போக்கில் வருணிக்கிருர் சரத்சந்திரர்.

பொதுவில், கட்டுப்பாடுகள் நிறைந்த வங்காள சமுதாயத்திற்கு சரயூ ஒரு உத்தமமான இலக்கணம். திடீர் திடீர் என்று கோபதாபங்களுக்கும் விருப்பு வெறுப்புகளுக்கும் ஆளாகாமல் ஒரே நிலையில் காட்சியளிக்கிருள் சரயூ. வடநாட்டினருக்கு பாரதத்தில்வரும் திரௌபதையைவிட, இராம காதையில் வரும் சீதையைவிட சரத்சந்திரரின் 'சரயூ' எல்லாக் குணங்களிலும் உயர்ந்தவள்.

இப்படி ஒரு படைப்பை இழைபிசாகாமல் கொண்டு வந்த முயற்சி மிகவும் பெரியது.

பாரதியின் புதுமைப் பெண்ணைக் காட்டிலும் சரத்சந்திரரின் இந்தப் பழமைப் பெண்ணிடம் ஒரு தமிழ்க் கணவன் விரும்பக்கூடிய சகல சுகங்களும் இருக்கின்றன. ★


இராமநாதபுரம் மாவட்ட

**தி. மு. க. 3-வது மாநாடு**

**பிப்ரவரி 22, 23 (சனி, ஞாயிறு) நாட்களில்**

தேவகோட்டை—வள்ளுவர் திடலில்

மஜீது அரங்கில் நடைபெறும்.

**தலைவர் :**

**க. அன்பழகன் எம். ஏ., எம். எல். ஏ.**

**திறப்பாளர் :**

இலட்சிய நடிகர் எஸ். எஸ். இராசேந்திரன்

அறிஞர் **அண்ணு,**

நாவலர் **நெடுஞ்செழியன்**

**மற்றும் முன்னணித் தோழர்கள் கலந்துகொள்வர்.**

| முதல் நாள் : | இரண்டாம் நாள் : |
|---|---|
| **22-2-58 சனி இரவு** | **23-2-58 ஞாயிறு இரவு** |
| மு. கருணாநிதி நடிப்பதும், புதுமை நாடக மன்றத்தார் அளிப்பதுமான **'உதய சூரியன்'** நாடகம் | தோழர் **நாகூர் அனிபா** குழுவினருடன் இசைவிருந்து |

இரு நாட்களுக்கும் நுழைவுக் கட்டணம் :
ரூ. 5, 3, 2. பெண்களுக்கு அணு 8.

**இ. ல. ம. சவுந்தரபாண்டியன்,** வ. கு. தலைவர்

**இராம. வெள்ளையன், மா. குருசாமி** செயலாளர்கள்

**நவமார்க்கண்டேயன்** — பொருளாளர்

# தமிழ் வளர்ந்த முறை !

Dr. மா. இராசமாணிக்கனார்
M.A.M.O.L.Ph.D

**முவகைத் தமிழ்**

மனிதன் உரை நடையிலும் செய்யுள் நடையிலும் செய்திகளை அறிகின்றான். இவ்விரண்டும் இயல் எனப்படும். பண் இசைத்துத் தாள வரையறை செய்து பாடப்படுவதும் ஒரு வகை. அது இசை எனப்படும். இயலும் இசையும் கலந்து காண்பார் கண்களுக்கும் கருத்துக்கும் விருந்தளிக்கவல்லதாய் நடித்துக் காட்டப்படுவது நாடகம் எனப்படும். இம்மூன்றும் ஒவ்வொரு மொழியிலும் அமைந்துள்ளன. ஆனால் ஏறத்தாழ இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்னரே மொழியை இங்ஙனம் மூன்று பிரிவுகளாகப் பிரித்து வளர்த்த பெருமை தமிழ் ஒன்றுக்கே உரியது என்பது தவறாகாது. அப் பண்டைக் காலத்தில் தமிழ்-இயற்றமிழ், இசைத்தமிழ் நாடகத் தமிழ் என மூன்று பிரிவுகளாக வகுக்கப்பட்டிருந்தது. இயற்றமிழில் வல்லவர் புலவர் என்றும், இசைத்தமிழில் வல்லவர் பாணர், பாடினியர் என்றும் நாடகர் தமிழில் புலமை பெற்றவர் கூத்தர் கூத்தியர் என்றும் பெயர் பெற்றிருந்தனர்.

**முத்தமிழ்ப் பயிற்சி**

இக்காலத்தில் இருத்தலைப் போலச் சங்க காலத்தில் கல்லூரிகள் இருந்தன என்று துணிந்து கூறுதல் இயலாது. ஆயினும், நாட்டின் மொழியாகிய தமிழை நலமுறக் கற்பிக்க எண்ணிறந்த திண்ணைப் பள்ளிகளோ உயர்நிலைப் பள்ளிகளோ இருந்திருத்தல் வேண்டும் என்பதில் எள்ளளவும் ஐயமில்லை. இயற்றமிழ்ப் பள்ளிகள் மிகப் பலவாக இருந்திருத்தல் வேண்டும்; இசைத் தமிழ்ப் பள்ளிகள் பல இருந்திருத்தல் வேண்டும். இங்ஙனமே நாடகத் தமிழ்ப் பள்ளிகளும் நன்முறையில் நடைபெற்றிருத்தல் வேண்டும். இவை இருந்திராவிடில், நானூற்றுக்குமேற்பட்ட இயற்றமிழ்ப் புலவர்களையும், எண்ணிறந்த இசைப்பாணர்களையும் மிகப் பலராகிய கூத்தரையும் சங்க காலம் பெற்றிருக்க வழி இல்லை.

இயற்றமிழில் வல்ல புலவர்கள் எண்ணிறந்த இலக்கண நூல்களையும் மிகப் பல இலக்கிய நூல்களையும் கற்றவர். இசைத் தமிழ்ப் புலவராகிய பாணர்களும் பாடினியர்களும் குரல், துத்தம், கைக்கிளை, உழை, இளி, விளரி, தாரம் என்னும் ஏழு இசைகளிலும் வல்லவராய் அக்காலத்தில் விளங்கிய சீறியாழ், பேரியாழ், செங்கோட்டியாழ் முதலிய பல வகை யாழ்களையும் வாசிக்கும் திறன் வாய்ந்தவராய் விளங்கினர். அக்காலத் தமிழிசை பற்றிய செய்திகள் மிகப் பலவாகும். இன்றுள்ள சிலப்பதிகாரம் முதலிய நூல் உரைகளில் இவை பற்றிய செய்திகள் இருத்தலை நோக்க, மிகப் பல இசை நூல்கள் அக்காலத்தில் இருந்திருத்தல் வேண்டும் என்பது ஐயமற விளங்குகின்றது உள்ளக் கருத்தை உடற் குறிப்புகளால் காண்போர்க்கு உணர்த்துவது நடனமும் நாடகமும் ஆகும். இக்கலையில் வல்லவர் கூத்தர், கூத்தியர் எனப்பட்டனர். இக் கலை பற்றியும் பல நூல்கள் தமிழகத்தில் இருந்தன என்பது இன்றுள்ள சங்கத்தமிழ் நூல்களால் அறியப்படுகின்றது. உள்ளக் குறிப்பை வெளியில் தெரியும் படி நடிப்பதில் விறல் படைத்தவள் விறலி எனப்பட்டாள்.

**தமிழ் வளர்ந்த முறை**

படித்துப் புலமை பெற்ற புலவர் பலர் பள்ளி ஆசிரியர்களாய அமைந்தனர். வேறு பலர் முடி மன்னர் அவைகளிலும் சிற்றரசர் அவைகளிலும் அவைப் புலவராக அமைந்தனர். பின்னும் பலர், ஊர்தோறும் சென்று பேரிகை கொட்டி வாணிகம் நடாத்திய பேரி - செட்டிமார் போலவும், பழமரம் நாடிச் செல்லும் பறவைகளைப் போலவும் தமிழைப் பேணி வளர்த்த தகைசான்ற மன்னர்களை நாடிச் சென்று, தம் புலமையை வெளிப்படுத்தி, அவர் தந்த பரிசிலைப் பெற்று வாழ்ந்துவந்தனர். அப் பரிசில் கழிந்தவுடன் பிற மன்னர்பால் சென்று தம் புகழ் நிறுவிப் பரிசு பெற்று மீண்டும் வந்தனர். இத்தகைய புலவர் பெருமக்கள் பாடியனவே சங்ககாலப் பாடல்கள்.

போர்க்களத்தில் வெற்றி பெற்ற அரசர்களைப் புலவரும் பாணரும் கூத்தரும் சென்று பாடுதல் மரபு. விறல் வேந்தர் அம்முத்தமிழ்ப் புலவர்களைப் பாராட்டி அவர் மனம் மகிழும்படி பரிசளித்தல் வழக்கம். சேரன், சோழன் என்னும் முடியுடை அரசர் இருவரையும் அவரோடு இணைந்து வந்த பெருவேளிர் ஐவரையும் தலையாலங்கானத்தில் முறியடித்த பாண்டியன் நெடுஞ்செழியனைக் கல்லாடனார், மாங்குடிகிழார், இடைக்குன்றூர் கிழார் போன்ற புலவர் பெருமக்கள் உளமாரப் புகழ்ந்து பாராட்டியுள்ள பாடல்களைப் புறநானூற்றில் காணலாம். வேந்தர்களது வெற்றிச் சிறப்பையும், குணநலன்களையும், கொடைச் சிறப்பையும் புலவர்கள் பாராட்டிப் பரிசு பெற்றனர். அங்ஙனமே தக்க காலங்களில் அவர்களுடைய அரிய அறிவுரைகளைப் பாராட்டிய வேந்தர்கள் அவர்களுக்கு மனது வந்து பரிசளித்தனர். அரசர் இருவருக்குள் போர் நிகழ இருத்தலை உணர்ந்து, அப்போர் நடைபெறுமற் காத்த புலவர்களும் உண்டு. அப்புலவர் பெருமக்களும் பரிசில் பெற்றனர். ஆட்சி முறையிலும் தனிப்பட்ட வாழ்க்கை முறையிலும் அரசர்க்கு அறிவுரை கூறிய அருந்தமிழ்ப் புலவர்களும் அக்காலத்தில் வாழ்ந்தனர். தன் மனைவியைத் துறந்த பேகனுக்குக் கபிலர், பரணர் முதலிய சான்றோர் அறிவுரை பகன்றனர் என்பதைப் புறநானூற்றில் காணலாம். தம் மன்னனோடு போர்க்களம் புகுந்து, அவனை அவ்வப்போது ஊக்கப்படுத்தி, அவனோடு இன்புற்றும் துன்புற்றும் வாழ்ந்த புலவர்களும் உண்டு. கபிலரும் ஔவையாரும் இத்துறைக்கு ஏற்ற சான்றோர்.

'புலமை புலமைக்காகவே' என்பது பண்டைக்காலக் குறிக்கோளாகும். மருத்துவர், கொல்லர், கூலவாணிகர், பேரிகை அடித்து வாணிகம் செய்தவர், வளமனையைப் பாதுகாத்தகாவற் பெண்டிர், குயத்தியர், குறத்தியர் முதலிய பலரும் தத்தம் தொழில்களைச் செய்துகொண்டே பெரும் புலவர்களாகத் திகழ்ந்தனர். அவர்கள் மக்களிடம் காணப்பட்ட வீரம், கொடை, அன்பு, அருள் முதலிய நற்பண்புகளைப் பாராட்டிப் பாடிய பாடல்கள் பலவாகும்.

புலவர்கள் அரசர்பால் பரிசில் பெற்று மீண்டும் தம் ஊர் செல்லும்போது வள்ளல்களை நாடிச் செல்லும் புலவர்களை வழியில் சந்திப்பதுண்டு; உடனே அவர் தம் வறுமையைப் போக்க விழைந்து, அவர்களைத் தமக்குப் பரிசில் ஈந்து மகிழ்ந்த மன்னர்பால் ஆற்றுப்படுத்துதல் வேண்டும். தமக்குப் பரிசில் தந்த மன்னனுடைய சிறப்பியல்புகள், அவனது அரண்மனைச் சிறப்பு, நாட்டுச் சிறப்பு, நகரச் சிறப்பு, அந்நகரத்திற்குச் செல்லும் வழி பற்றிய விவரங்கள் இன்ன பிறவற்றைப் பரிசில் பெற்று மீளும் புலவர், வழியில் காணப்பட்ட புலவர்க்கு விரித்துரைத்து, அவரை அவ்வள்ளல்பால் ஆற்றுப் படுத்தல் ஒரு நீண்ட பாவாக அமையும். இங்ஙனம் அமைந்த பாட்டுப் புலவர் ஆற்றுப் படை எனப்படும். இங்ஙனமே பாணரை ஆற்றுப்படுத்தலும் உண்டு. அது பாண் ஆற்றுப்படை எனப்படும். இவ்வாறே விறலியை ஆற்றுப்படுத்தலும் உண்டு. அது விறலி ஆற்றுப்படை எனப்படும். இப்படியே கூத்தரை ஆற்றுப்படுத்தலும் வழக்கம். அது கூத்தர் ஆற்றுப்படை எனப் பெயர் பெறும். இத்தகைய ஆற்றுப்படைப் பாடல்களைப் பத்துப் பாட்டில் காணலாம். புறநானூற்றிலும் பல பாடல்கள் உண்டு.

**விற்பனையாகிறது !**

**அறிஞர் அண்ணாவின்**

**எழில் ஓவியம்**

ஏராளமான தோழர்களின் வேண்டுகோளுக்கிணங்க தென்றல் "பொங்கல் மலரில்" வெளியான அறிஞர் அண்ணாவின் மூவண்ணப்படம் பெரிய அளவில், கண்ணாடி போடுவதற்கு ஏற்ற முறையில் வழுவழுப்பான கனத்த ஆர்ட் காகிதத்தில் தயாரித்திருக்கிறோம்.

**விலை 31 காசுகள்.**

தபாலில் அனுப்ப தபால் செலவு உள்பட 50 காசுகள். வியாபாரிகள் கழிவு 6 காசுகள் நீக்கி தேவையான பிரதிகளுக்கு 25 காசுகள் வீதம் முன்பணத்துடன் விண்ணப்பிக்கவும்.

**தென்றல் : : சென்னை-6.**

198376

> "போற்றுபவர் போற்றட்டும்; புழுதி வாரித்
> தூற்றுபவர் தூற்றட்டும்; தொடர்ந்து செல்வேன்
> ஏற்றதொரு கருத்தை என(து) உள்ளம் என்றால்
> எடுத்துரைப்பேன் எவர்வரினும் நில்லேன்: அஞ்சேன்!"

# எண்ணம்

மலர் 4 | 22—2—58 | இதழ் 32

## கொள்கை வளர்கிறது!

சென்னை சட்டமன்றத்தில் தி. மு. கழகத்தின் அதிகாரப் பூர்வமான குரல் ஒலிக்கத் தொடங்கி ஓராண்டு முடியப் போகிறது. இந்த ஓராண்டு காலத்திற்குள் தி. மு. கழகத்தைப்பற்றி சட்ட சபைக் காங்கிரஸ் கட்சி நன்கு புரிந்துகொண்டிருக்கிறது. தேர்தல் காலத்தில், 'இவர்களுக்குச் சட்டமன்றத்தில் பேசத் தெரியுமா?' என்று நம்மைக் கேலி செய்த காங்கிரஸ் பிரமுகர்கள் இன்று சட்டமன்றத்தில் குழம்பித் தவிப்பதை தேசியப் பத்திரிகைகளே படம் பிடித்துக் காட்டுகின்றன. எதிர்க்கட்சி என்று ஒரு கட்சி இருந்தாலும், தி. மு. கழகத்தைச் சார்ந்த பதினைந்து பேர்தான் காங்கிரஸ் கட்சிக்குப் பெருந் தலைவலியாக இருக்கிறது என்பதை அமைச்சர்கள் பொதுக் கூட்டங்களில் பேசும் பேச்சு தெளிவுபடுத்துகிறது.

தோழர் ராமமூர்த்தி சட்ட சபையில் எதிர்க்கட்சித் தலைவராக இருந்த காலத்தில் காங்கிரசார் செய்த சட்ட விளக்கப் பிரசங்கங்களும், சமூகப் பிரச்சினைபற்றிய வாதப் பிரதிவாதங்களும் தி. மு. கழகம் நுழைந்த பிறகு இல்லை! ஆரம்ப காலத்தில் 'முஷ்டி'யை முடுக்கியது உண்மைதான். ஆனால் காலப்போக்கில் காங்கிரசார் தங்களுடைய பாதையை மாற்றிக்கொண்டு விட்டார்கள் என்பதை வெகு பேர் அறியமாட்டார்கள். இப்போதெல்லாம் சட்டமன்றத்தில் காங்கிரஸ் மந்திரிகள், எதிர்க்கட்சிகள் ஒத்துழைக்க வேண்டும் என்று தாழ்ந்த குரலிலேயே பேசுவதைப் பார்க்கிறோம். குறிப்பிட்ட ஒரு திட்டத்தை சட்டமன்றத்திற்குக் கொண்டு வருவதைக் காட்டிலும், அந்தத் திட்டத்தை, சட்ட சபைக் கட்சித் தலைவர்களைத் தனியாகக் கூட்டி கலந்தாலோசிப்பதிலே காங்கிரஸ் அமைச்சரவை கவனம் செலுத்தி வருகிறது. இதற்கு என்ன காரணம்? சட்டமன்ற உறுப்பினர்கள்—எதிர்க்கட்சி உறுப்பினர்கள் திட்டத்தை உடைத்துவிடுவார்கள் என்ற தாழ்வு மனப்பான்மை காங்கிரசாரின் உள்ளத்தில் வேரூன்றிவிட்டது. அதனால்தான் கலவரமில்லாமல் எல்லாக் காரியங்களையும் கட்சித் தலைவர்களைக் கூட்டிப் பேசுவது என்ற புது முறையை அவர்கள் கையாளத் தொடங்கியிருக்கிறார்கள். இதனால் அவர்கள் இரண்டுவிதமான சாதகங்களைப் பெறுகிறார்கள். ஒன்று திட்டம் பாதுகாக்கப்படுகிறது, மற்றொன்று, கட்சித் தலைவர்கள் சந்திப்பில் யார் யார் என்னென்ன பேசினார்கள் என்பதற்குப் பொதுமக்கள் சாட்சியங்கள் இல்லை. அதனால்தான் மந்திரிகள் எதையும் கூட்டிக் குறைத்து வெளியில் துணிந்து சொல்ல முடிகிறது. அதுவும் தி. மு. கழகத்தின் மீது பழி சுமத்துவதற்கு இந்த முறை அவர்களுக்குப் பெரிதும் பயன்படுகிறது. ஏனென்றால் எதிர்க்கட்சிகள் உட்பட எல்லாக் கட்சியினரும், காங்கிரசுடன் இணைந்து கொண்டு தி. மு. கழகத்தை ஒழிப்பதிலேயே கண்ணும் கருத்துமாக இருக்கிறார்கள். தமிழகத்தில் தி. மு. கழகத்தைத் தீர்த்துக் கட்டுவதற்கு எந்தப் 'பாவ' காரியத்தைச் செய்யவும் எதிர்க்கட்சிகள் தயங்குவதாகத் தெரியவில்லை. தங்கள் தங்கள் கட்சியின் கௌரவங்களையெல்லாம் மறந்து, பொய்ப் பிரசாரத்தைத் தொடங்க ஆரம்பித்துவிட்டார்கள். இந்த நேரத்தில்தான் கழகத் தோழர்கள் மிகுந்த எச்சரிக்கையோடு இருக்க வேண்டும். கடந்த சில நாட்களாக அறிஞர் அண்ணா அவர்கள் இதையே எல்லாக் கூட்டங்களிலும் குறிப்பிட்டு வருகிறார்கள். காங்கிரஸ் கட்சி பூரணத்துவம் பெற்று விளங்கிய காலத்தில் இருந்த பூரிப்பை, இன்றையத்தினம் தி. மு. கழகம் பெற்றிருக்கிறது. வளர்ந்து இருக்கும் இந்தச் சக்தி சிதறவிடாமல் பாதுகாத்துக்கொள்வதே தோழர்களின் கடமை! காந்தியாரின் அகிம்சையில் நம்பிக்கை வைத்ததைக் காட்டிலும் நாம் நமது கடமை கண்ணியத்திலும் கட்டுப்பாட்டிலும் நம்பிக்கை வைத்திருக்கிறோம். அந்த நம்பிக்கை மென்மேலும் வளர வேண்டும். ★

## குமரிப் பெண்ணும் பக்தவத்சலமும்!

கடந்த சட்ட சபையில் மந்திரிகளெல்லாம் திராவிட நாடு பிரச்சினைபற்றியும், தி. மு. கழகம் பற்றியுமே பேசித் தீர்த்தார்கள். காமராசர் பேசினார்; சுப்ரமணியம் தனது 'யுத்தகளப் பிரசங்க'த்தை நடத்தினார். 'எல்லாம் வல்ல இறைவனை'த் துணைக்கழைத்து பக்தவத்சலம் மிரட்டினார். தி. மு. கழகத்தை, மிகச் சாதாரணம் என்று அமைச்சர்கள் தங்கள் தங்கள் பேச்சில் குறிப்பிட்டார்களே தவிர பேசுவதற்கு அவர்கள் எடுத்துக் கொண்ட முயற்சிகள் தி. மு. கழகம் மிகப் பெரிய இயக்கம் என்பதையே நிரூபித்தன.

போலீஸ் மந்திரி பக்தவத்சலம் தன்னுடைய உரையின் இறுதிப் பகுதியில் 'நெருப்புடன் விளையாடாதீர்கள்' என்று தி. மு. கழகத்திற்கு பயம் காட்டினார். நெருப்புச் சுட்டுவிடுமாம்! உண்மைதான்! எந்த நெருப்பைத் தொடக்கூடாது; எந்த நெருப்பை அணைக்க வேண்டும் என்று நமக்குத் தெரியும்!

அறிஞர் அண்ணா அவர்கள் சென்ற வாரம் சென்னையில் நடந்த ஒரு கூட்டத்தில் சரியான மொழி கொடுத்தார்கள்.

"பக்தவத்சலம் நெருப்போடு விளையாடாதீர்கள் என்று நமக்குத் தெரிவிக்கிறார். அவருக்கு நாம் தெரிவிப்போம். நெருப்பு அடுப்போடு இருக்கும்வரை அதோடு யாரும் விளையாடமாட்டார்கள்" என்று கூறினார்கள்.

அடுப்பில் இருக்க வேண்டிய நெருப்பை பொறுப்பில்லாத பெண் கவனிக்காமல் விட்டு விட்டால், அந்த நெருப்பு தெருவெல்லாம் பரவும். தெருவிலே பற்றி எரியும் நெருப்பை அணைக்காமல் விட்டால், உலகம், பார்த்துக்கொண்டிருப்பவர்களைக் கேலி செய்யாதா?

"லூயி மன்னன் மூட்டிய நெருப்பை மக்கள் அணைத்து விடவில்லையா? ஜார் மன்னன் வைத்த நெருப்பு புகைந்து போனது ஏன்? இவைகளெல்லாம் அடுப்போடு இல்லாததால் தானே" என்று அண்ணா கேட்டார்.

அண்ணா அவர்கள் பேசும் போது இன்னொரு உதாரணத்தையும் குறிப்பிட்டார்-முறையாகச் சமைத்துப் பழக்கப்படாத குமரிப் பெண்கள் அடுப்பைச் சரியாகப் பாதுகாத்துக்கொள்ளாததால் அவர்களையுமறியாமல் அவர்களது முந்தானையில் தீப் பிடித்துக்கொள்கிறது; ஏராளமான பெண்கள் அதனால் இறந்து போகிறார்கள் அந்தக் குமரிப் பெண்களைப்போலவே காங்கிரஸ் சர்க்காரும் நெருப்பை அடுப்போடு வைத்துக்கொள்ளத் தெரியாமல் தீப் பிடித்து மடிந்துவிடக்கூடாது, என்று எச்சரிக்கை விடுத்தார்கள்.

கவனமுள்ள தாய்மார்கள் நெருப்புக்குப் பக்கத்தில் குழந்தைகளை விடமாட்டார்கள். தாங்கள் வெளியிலே செல்லும்போது கூட குழந்தைகளை நெருப்புக்குப் பக்கத்தில் போகவிடாமல் பாதுகாப்பு செய்துவிட்டுப் போவார்கள். ஆனால் இந்தக் காங்கிரஸ் சர்க்கார் - மழலையின் இனிமையுணராத மலட்டு சர்க்காராக இருந்தால், நெருப்பு அணைவதைத் தவிர வேறு வழியில்லையே! ★

## வெண்பாப் போட்டி-12.

ஈற்றடி :

'நேரு'வுக்குக் காக்கை நிகர்.

(சிலேடை வெண்பா)

முடிவு தேதி 8-3-58.

தென்றல் வெண்பாப் போட்டி : : சென்னை - 6.

M211, N54TL



# குஞ்சரத்தின் கதை

செ ன்னையிலிருந்து புதுக்கோட்டை மார்க்கமாக தனுஷ்கோடி செல்லும் ரயில்பாதையில் - கோட்டையூருக்கும் செட்டிநாடு ரயில் நிலையத்திற்கும் இடையில் அடர்த்தியான காடு ஒன்று வருகிறது. சென்னையிலிருந்து கிளம்பும் இண்டோ சிலோன் எக்ஸ்பிரஸ் காலை ஒன்பது மணியளவில் அந்தக் காட்டைக் கடக்கிறது. புகைவண்டி, அந்த இடத்தில் பயங்கரமான ஓசையைக் கிளப்பிக்கொண்டு போகும். முட்புதர்களும், கள்ளிச்செடிகளும், ஈச்சை, பனைமரங்களில் படர்ந்து நிற்கும் பச்சைக்கொடிகளும் அந்தஇடத்தை இருட்குகையாக்கி வைத்திருந்தன. ரயில் வண்டிகளைத் தவிர வேறு எந்த நடமாட்டத்தையும் அங்கே பார்க்கமுடியாது. அவ்வளவு பயங்கரமான காடு! ரயிலின் சத்தம் கேட்டு காட்டு மாடுகள் அலறி அடித்துக் கொண்டு ஓடும். உடும்புகள் இழையும். இரவு நேரங்களில் பிரயாணிகள் கதவுகளை மூடிக்கொள்வார்கள். 1945 வரை அவ்வளவு பயங்கரமாக இருந்த காட்டுப் பகுதியில் இன்று ஒற்றையடிப்பாதைகள் பின்னிக் கிடக்கின்றன. வண்டிப்பாதைகள் ரயில் பாதையைக் குறுக்கிடுகின்றன. அந்தக் காட்டுக்குள் பாதைகள் எப்படி வந்தன? ரயில்மூலமாக அந்தப் பாதையில் பிரயாணம் செய்வோருக்குத் தெரியும்; ரயில் அந்தக் காட்டுக்குள் வரும்போது ஆலய மணியோசை கேட்கும்; சந்தைக் கடை இரைச்சலைப்போல ஜனங்களின் பேச்சுக்குரல் காதைத் துளைக்கும். ஆனல் எதுவும் கண்களுக்குத் தெரியாது. இது கண் கட்டு வித்தையல்ல! காட்டின் அடர்த்தி அப்படி!

ரயில்பாதைக்கு நூறு கெஜ தூரத்தில் காட்டுக்குள் ஒரு சிறு கோயில் இருக்கிறது. இத்தனை ஆண்டு காலமாக கேள்வி-கேட்பாரற்றுக்கிடந்த அந்தக் கோயிலுக்கு திடீரென்று ஒரு 'மவுசு' ஏற்பட்டது. வண்டிகளிலும், கார்களிலுமாக பக்தர்கள் வர ஆரம்பித்தார்கள். மதுரையம்பதியில் பாண்டிமுனி கோயிலுக்கு ஏற்பட்ட புகழைப்போல், திருச்சி மாவட்டத்தில் சமயபுரத்துக்காளிக்கு வளர்ந்த செல்வாக்கைப்போல் இராமனுதபுர மாவட்டத்தில் இந்தக் கோயிலுக்கும் கீர்த்தி பெருகிற்று. எங்கு பார்த்தாலும் **சோலையாண்டவர் கோயிலைப்** பற்றிய பேச்சாகவே இருந்தது. சொரிசிறங்கு பிடித்தவர்கள் முதல், சொத்துச் சுகங்களை இழந்தவர்கள் வரை அந்தக் கோயிலுக்கு வர ஆரம்பித்தார்கள். சர்க்கார் அதிகாரிகள் கூட அவரவர்களின் பதவி உயர்வுகளுக்காக வேண்டிக் கொண்டு போனுர்கள். ஆண்டிப் பண்டாரங்கள் குடியேற ஆரம்பித்தார்கள். மேலைநாடுகளில் நொண்டி, நுடம், கூன், குருடு - இவர்களெல்லாம் ஆஸ்பத்திரிக்குப் போகிருர்கள். தமிழ்நாட்டில் அங்கவீனர்களைப் பார்க்க வேண்டுமானுல் நாலு கோயிலுக்குப் போனுல் போதும்! எவனே வைத்த தீ எப்படியோ பரவி, காட்டுக்குள் கிடந்த இடிந்த கோயிலுக்கு ஒரு 'திசை' அடித்தது. புதுப் புது பாதைகள் வந்து கோயிலை முட்டின. மிருகங்களை விரட்டுவதற்காக ஓசையைக் கிளம்பிக்கொண்டு வந்த ரயில் வண்டிகள், இப்போது அந்த இடத்தில் வரும்போது, நாலா பக்கங்களிலிருந்தும் கோயிலுக்கு வரும் கூட்டத்தை ரயில்பாதைக்கு வந்துவிடாதபடி தடுத்து நிறுத்துவதற்கு ஓசை கொடுத்துக்கொண்டு வருகின்றன. இத்தகைய பக்திமார்க்கத்தால் உண்டான பாதைகளில் ஒன்றுதான் குன்னக்குடியிலிருந்து கானுடுகாத்தான் செல்லும் காட்டுப் பாதை!

திருப்புத்தூர் தாலுகாவிலிருந்து வருகிறவர்கள் காலை மூன்று மணிக்குப் புறப்பட்டால் எட்டு அல்லது ஒன்பது மணியளவில் சோலையாண்டவர் கோயிலுக்கு வந்துவிடலாம். கோயிலுக்கு வரும்போது யாரும் பாதையைப் பற்றி, குறுக்கிடுகின்ற ஊர்களைப் பற்றிக் கவனிப்பதில்லை. காலைநேரம்! மேலும் நிலம் தெரியுமுன் கோயிலுக்குப் போய்விட வேண்டுமென்று நடப்பார்கள். வண்டிகள் அணி அணியாக வரும். அதுவும் வெள்ளிக்கிழமை செவ்வாய்க்கிழமைகளில் கூட்டத்தை அளவிட முடியாது.

சோலை ஆண்டவர் கோயிலுக்கு வரும் பக்தர்களில் பலவகையுண்டு. சிலர் பொங்கல் வைக்க வருவார்கள்; வேறு சிலர் மாவிளக்கு வைக்க வருவார்கள்; மற்றும் சிலர் தொட்டில் கட்ட வருவார்கள். மணமான புதுத் தம்பதிகள் மதலை எடுத்து வைக்க வருவார்கள். நெற்றியில் வைக்க வேண்டிய குங்குமம் அங்கே, நிலமெங்கும் பரவிக் கிடக்கும். சில்லறைக் காசுகள் சிதறடிக்கப்பட்டிருக்கும். பிச்சைக்காரர்கள்கூட அதைத் தொடுவதில்லை. அதை யாரும் எடுத்தால், யார் என்ன குற்றத்திற்காக அந்தக் காசைப் போட்டார்களோ, அந்தக் குறை, எடுத்தவனைப் பற்றிக் கொள்ளுமாம்! இப்படி ஒரு வேதாந்தம்! எல்லோரும் போனபிறகு பூசாரிதான் அவைகளைப் பொறுக்கிக்

**தென்னரசு**

— 9ம் பக்கம் —




# அந்தி மயக்கம்

மா.கி.தசரதன், எம்.ஏ

-13-

அவன் போன பின்னும் சற்று நேரம் அங்கே அமைதி நிலவியது. அறைக்குள் கூட்டிற்குள் அடைக்கப்பட்ட புட்களைப்போல அவனும் அவளும் மட்டுமே இருந்தனர். ஆனல் இந்த இருவர் மனத்துள்ளும் நிலவிய எண்ணங்கள் தான் எத்தகையன! வேறு வேறு உலகத்தைச் சேர்ந்த இருவர் அங்கே அடைபட்டுக் கிடந்தனர்.

ஞானசம்பந்தன் மறுபடியும் அவளை அணுகி "பசிக்கிறதா" என்ருன். "இல்லை" என்று ஒரே சொல்லில் விடை சொல்லி முடித்துவிட்டாள்.

ஞானசம்பந்தன் தானும் ஏதும் சாப்பிடாமல் கட்டிலில் சாய்ந்து கொண்டு சிகரட்டைப் புகைத்துக்கொண்டிருந்தான்.

"நீங்கள் சாப்பிடுவதுதானே" என்று சொன்னபோது அவள் குரலில் இரக்க உணர்ச்சி இருந்ததை அறிய முடிந்தது.

"நீ, இந்த திராட்சை மட்டுமாவது எடுத்துக்கொள்ளேன்" என்று ஒரு கொத்துபபழத்தை எடுத்து நீட்டினுன்.

ஆணைக்குக் கீழ்படிந்து நடக்கும் படைவீரனைப்போல அவள் கையை நீட்டி அதை வாங்கிக் கொண்டாள்.

அவள் எல்லாப பழங்களையும் சுதப்பித் ...ப் ...வுடன் இன்னெரு ...கொத்தை எடுத்துக் கொடுத்தான்.

"வேண்டாம். இதுவே போதும்" என்ருள் அவள்.

இப்போது அவள் கண்களில் முன்னே இருந்த கலக்கம் காணவில்லை. மருட்சி மட்டும் கொஞ்சம் இருந்தது. முகத்தில் சோகம் மட்டும் அப்படியே நிலவியது. இப்போது அருகில் இருந்து அவள் அழகை நன்ருகப் பார்க்கும் வாய்ப்பு இருந்தது ஞானசம்பந்தனுக்கு. அந்த அழகில் அவன் தன்னை மறந்து ஈடுபட்டான்.

இயற்கை ஒளியில் இருப்பதைவிட எதுவும் செயற்கை ஒளியில் கவர்ச்சியாக இருக்கிறது. பட்டுத் துணியைப் பாருங்கள். வெட்ட வெளியில் வெயிலில் வைத்துப் பார்த்தால் அதிலே அழகும் மிகுதியாகத் தெரியவில்லை, பெருகும் இருப்பதாகத் தெரியவில்லை. ஆனல் அதே துணி மின் விளக்கின் கீழே இருக்கும்போதுகண்ணைப் பறிக்கும் பளபளப்போடு விளங்குகின்றது. அதிலும் பகலில் இருப்பதைவிட இரவின் ஆழ்ந்த அமைதியில் எதுவும் இயல்பைவிட இன்னும் கொஞ்சம் மதிப்பும் பெருமையும் பெறுவது உண்டு.

ஒய்யார விலாஸ் மாடியில் தன்னந் தனியே, இரவின் இனிமையில், இருந்து பார்த்தபோது அவள் அழகு ஞானசம்பந்தனைப் பற்றி ஈர்க்கும் தன்மையோடு இருந்ததில் வியப்பில்லை.

"என்னை நம்புகின்ருயா நீ?" என்று கேட்டான் அவள் முகவாயைத் தாங்கியவாறு.

அவள் ஒருகணம் அவன் கண்களை ஊடுருவிப் பார்த்தாள். கண்களின் வழியே சென்று உள்ளத்தின் அடித்தளத்தில் ஓடி மறைத்து வைத்திருக்கும் எண்ணக் குவியல்களை அறிந்து கொள்ள முயன்ற முயற்சி அந்தப் பார்வையில் இருந்தது.

தூக்கிய முகத்தைத் தாழ்த்தாமல் "நம்புகின்றேன்" என்ருள்.

"உன் பெயர் என்ன?"

"எது வேண்டுமாஞலும் இடுங்கள்"

"நான் இடுவது இருக்கட்டும். நாள் ... தாஞல் "...து" என்று ...க்கும். நான் அதக் கேட்கவில்லை, இதுவரை இருந்ததைக் கேட்கிறேன்"

"அதேதான் அமுதவல்லி என்று சொல்லுவார்கள்" என்ருள்.

"நான் கேட்பதற்கெல்லாம் தடையில்லாமல் விடை சொல்வாயா?"

"அப்படி என்ன கேட்டுவிடப் போகின்றீர்கள்?"

"உன் கதையைத்தான்"

"என் கதையையா?"

"ஆமாம்"

"கதை அல்ல-நடந்ததுதான். துணிவு இருக்குமா உங்களுக்கு?" என்று அவள் திருப்பிக் கேட்டாள்.

என்ன சொல்வது என்றே முதலில் அவனுக்கு விளங்கவில்லை.

வாய் மூடி மௌனிபோலக் கிடந்த இந்தப் பெண் எவ்வளவு பேசுகின்றது என வியந்தான்.

"சொல்லேன்" என்று தூண்டினுன்.

"முதலில் அந்தச் சோற்று மூட்டையைப் பிரிப்போம். அது முடியட்டும். பிறகு சொல்கிறேன்" என்று சொல்லிவிட்டுத் தானே போய் இலை எடுத்து வந்து போட்டு அவனுக்கு உணவு படைத்தாள். 'நீயும் உடன் இருந்து உண்டாலதான் ஆயிற்று. என்று ஞானசம்பந்தன் அவளையும் இழுத்து உட்கார வைத்து வேடிக்கை பார்த்தான்.

உணவு முடிந்ததும் ஏதோ நெடு நாட்கள் பழகி இடையிலே பிரிந்திருந்த நண்பர்கள் கூடியதைப்போல ஆவலோடு மறுபடியும் பேச்சைத் தொடர்ந்தனர்.

"அமுதம்."

"உங்கள் பெயரைச் சொல்லவே இல்லையே."

"ஞானசம்பந்தன்."

"எந்த ஊர்? சீர்காழியா?"

"ஏது-சைவமோ!"

"இல்லையே."

"நான் சீர்காழி இல்லை. மாத்தூர்."

"என்ன தொழில் செய்கின்றீர்கள்?"

"நானு?"

"ஆமாம்."

"படிக்கின்றேன், கல்லூரியில்."

"இதோ தெரிகின்றதே அது" என்று சொல்லிவிட்டு கலகலவெனச் சிரித்தாள்.

அந்தச் சிரிப்பொலியைக் கேட்டதும் ஞானசம்பந்தனுக்கே கொஞ்சம் நாணமாக இருந்தது. ஆனலும் ஆசை வெட்கம் அறியாது அல்லவா?

"அது கிடக்கட்டும் முதலில் ஊமைபோல் இருந்தாய் இப்போது வாயை மூடமாட்டேன் என்கிருயே?"

"நான்தான உங்களை நம்புகின்றேனே."

"உண்மையாகவா?"

"ஆமாம்."

"அப்படியானல் இன்னும் உன்னைப் பற்றிச் சொல்லவே இல்லையே. என்னைப் பற்றி மட்டும்தானே கேட்டுக்கொண்டாய்?"

"என்னைப்பற்றி என்ன இருக்கிறது சொல்ல?"

"இருப்பதை மட்டும் சொல்லு போதும். இல்லாததை நான் தெரிந்துகொள்ளுகின்றேன்."

"ஆகட்டும்" என்ருள் அவள்.

"ஆகட்டும்" என்று ஆர்வத்தோடு சொல்லிவிட்டாளே தவிர வாயிலிருந்து சொற்கள் வரவில்லை. உதடுகள் துடிப்பது போல் தோன்றியது. கண்களின் ஓரம் ஈரமாவதை விளக்கொளியில் கண்டுகொள்ள முடிந்தது. இந்தக் காட்சியைக் கண்டவுடன் ஞானசம்பந்தனின் நெஞ்சம குழைந்துவிட்டது.போன கணத்திலே கவலை என்பதையே அறியாதவளைப்போல ஏட்டிக்குப் போட்டியாக ஏதேதோ பேசிக் கொண்டிருந்தாள். அதற்கும முன்னே இருந்த அமைதி கலைந்து கொஞ்சம் கலகலப்பு பிறந்தது என்று எண்ணிய எண்ணம் தவறு என்பதுபோல் இப்போது கண்கள் நீர்பொழிந்திடும் நிலையினவாயினவே என்று திடுக்கிட்டான். ஞானசம்பந்தனின் கண்களும் கலங்கின. என்ருலும் துடைத்துக்கொண்டு அவளையும் தேற்ற வேண்டும் என்று எண்ணியவனுய் பேச்சுத் தொடுத்தான்.

"என்ன என்மேல் கோபமா?"

"............ ..."

"சொல்லமாட்டாயா?"

"................"

"இப்போதுதானே சொன்னுய் என்னை நம்புகின்றேன் என்று. அதற்குள்ளா அந்த நம்பிக்கை போய்விட்டது?என்ன செய்தேன் நான்?"

"..  ........."

"சரி நான் போகின்றேன்" என்று சொல்லிவிட்டு ஞானசம்தன் போவதுபோல் கட்டிலை விட்டு இறங்கினுன்.

இதற்குள் அமுதவல்லி வந்து அவன் கையைப் பிடித்து இழுத்துத் தடுத்து உட்கார

வைத்து தேம்பித் தேம்பி அழுதாள். அவள் கண்ணீரைத் துடைத்தவாறே "போகாதீர்கள்" என்று பலமுறை வேண்டி கேட்டுக்கொண்டாள்.

ஏன் என்று ஞானசம்பந்தனும் கேட்கவில்லை. இட்டகட்டளையை ஏற்று அமைதியாக உட்கார்ந்து ஒரு சிகரட் எடுத்துப் பற்ற வைத்தான்.

ஒரு முறை மூச்சு இழுத்து புகையை உள்ளிருந்து வெளி விடும்போதே அவள் அதைத் தன் கையால் எடுத்து "இது வேண்டாம்" என்றாள்.

"ஏன் உனக்குப் பிடிக்கவில்லையா?"

"ஆமாம் இந்தப் புகைகுமட்டுகின்றது"

"சரி விட்டுவிடுகின்றேன் நீ சொன்னதை நான் கேட்டேனே. நான் கேட்டதை நீ இன்னமும் சொல்லவில்லையே"

"என் கதையையா கேட்கிறீர்கள் ?"

"உங்களுக்குக் குமட்டும்'

"இருக்கட்டும்"

"என்மேல் வெறுப்பு உண்டாகும்"

"இல்லை பரிதாபம் பிறக்கும். சொல் கேட்கிறேன்" என்று ஞானசம்பந்தன் அவள் கதையைக் கேட்க ஆவல் கொண்டதைப் புலப்படுத்தினான்.

அன்று காலை செய்தித்தாளில் விபசார ஒழிப்புபற்றி ஒரு கட்டுரை படித்தான் அவன். அந்தக் கட்டுரையில் விபசாரம் ஏன் ஏற்படுகின்றது என்பதைப்பற்றி எவ்வளவோ காரணங்களைக் கூறியிருந்தார் கட்டுரை ஆசிரியர். பெரும்பாலான பெண்கள் விரும்பியே விபசாரம் செய்வதாகவும் ஒரு கருத்து இருக்கிறது என அவர் அதில் குறிப்பிட்டிருந்தார். நேரிலேயே கேட்டுத் தெரிந்துகொள்ளலாமே என்ற ஒரு எண்ணமும், ஏதும் அறியா அமுதவல்லியின் முகத் தோற்றத்தில் இருந்த குழந்தைத் தன்மையும் அவன் உள்ளத்தில் அவள் கதையைக் கேட்டு அறிய வேண்டும் என்ற ஆவலைத் தூண்டியது.

அந்த ஆவலினால் தூண்டப் பெற்றவனைப் பின்னும் அவளைப் பலமுறை வற்புறுத்தினான். அமுதவல்லி இரண்டு மூன்று முறை தன் கதையைச் சொல்லத் தொடங்குவது போல் ஏதோ முயற்சியும் செய்தாள். ஆனால் அந்த முயற்சியில் ஈடுபடும்போதே அவள் உணர்ச்சி வயப்பட்டு கண்கலங்கிப்போகும் நிலை வந்தது. கண்களைத் துடைத்துக் கொள்ளாமலே தேம்பித் தேம்பி அழுத காட்சி ஞானசம்பந்தனின் நெஞ்சத்தில் நெருப்பு அள்ளிக்கொட்டியது போல் இருந்தது.

"சரி விட்டுவிடு. வேண்டாம் சொல்லவேண்டாம்" என்று இவனே அவளைத் தேற்றவேண்டியதாயிற்று. சற்றுநேரம் அமைதியாக இருப்பாள். பிறகு ஏதோ எண்ணியவளைப்போல் நிமிர்ந்து பார்ப்பாள். மறைந்திருந்த துன்பம் மடை உடைத்ததுபோல் கண்ணீர் வெள்ளத்தைத் துணைக்குக் கூட்டிக்கொண்டு பீறிட்டுக் கிளம்பும்.

"சரி நீ ஒன்றும் சொல்ல வேண்டாம். பேசாமல் படுத்துக் கிட" என்று வெறுப்பாகச் சொல்லிவிட்டு வேறு பக்கம் திரும்பிக்கொண்டான் ஞானசம்பந்தன். இப்போது அவன் மனதில் ஒரு புதிய ஐயம் தோன்றிவிட்டது. ஏகாம்பரம் அவனிடம் சில பேரைப் பற்றிச் சொல்லியிருக்கிறான். அவர்கள் இப்படி 'வேஷம்' போட்டே காலம் கடத்திவிடுவார்கள் என்று. ஒருகால் அமுதவல்லியும் அந்த இனத்தைச் சேர்ந்தவளோ என்ற ஐயம் எழுந்தது. ஆனால் அவள் முகம் அவளை ஏதும் அறியாதவள் எனச் சொல்லிக் கொண்டிருந்தது. இதுபோன்ற நேரங்களில் முரட்டுத்தனமாக நடந்துகொண்டால்தான் முடியும் என்று ஏகாம்பரம் அவனுக்குச் சொல்லியிருக்கிறான். ஆனாலும் ஞானசம்பந்தன் என்னமோ முரட்டுத்தனமாக நடந்து கொள்ளவேண்டும் என்று எண்ணவே இல்லை. 'என்ன செய்வது இன்று இப்படி ஆகிவிட்டது' என்று எண்ணிக் கொண்டு கட்டிலின் ஒரு மூலையில் சோர்ந்துகிடந்தான்.

பகல் எல்லாம் பறந்தோடும் வண்டிகளும், பிறவுமாக போரொலிக் கூடமாக இருந்த சென்னையின் தெரு ஆழ்ந்த அமைதியின் அரவணைப்பில் அடங்கிக் கிடந்தது. எப்போதாவது ஒருமுறை யாராவது ஒருவர் நடந்துசென்றால்கூட அவர் கால் செருப்பு ஒலி 'கிரீச் கிரீச்' என்று மேல் மாடியைத் தொட்டுக்கொண்டிருந்தது. ஒய்யார விலாஸ் ஓட்டலின் கீழ் அறையில் இருந்த பெரிய கடிகாரம் ஒரு மணி அடித்தது. மேலும் எண்ணுவதற்குத் தயாராக இருந்தான் ஞானசம்பந்தன். ஆனால் ஒரு முறை ஒலித்ததோடு அந்தக் கடிகார மணிஓசை ஓய்து போய் விட்டது. மணி ஓசை கேட்டது. ஆனால் மணி எவ்வளவு என்று அவனுக்குத் தெரியவில்லை. பன்னிரண்டரை, ஒன்று, ஒன்றரை, ஆகிய மூன்று நேரங்களிலும் சுவர்க்கடிகாரம் ஒருமுறைதான் ஒலிக்கிறது. ஆகவே என்ன மணி இருக்கும் என்று அவனால் கணிக்க முடியவில்லை. 'எதோ இருந்துவிட்டுப் போகட்டும்' என்று எண்ணியவனாய் அமைதியானான். அமுதவல்லி என்ன செய்கின்றாள் என்று காண விரும்பியவனாய் அவள் பக்கம் பார்வையைச் செலுத்தினான்.

அழுது அழுது வீங்கிய முகத்தோடு இனி அழுவதில் பயனில்லை என்று தீர்மானித்துக் கொண்டு மெல்ல எழுந்து அவனை நெருங்கினாள்.

"என்மேல் கோபமா ?" என்று ஞானசம்பந்தனின் தோள்களில் தன் இரு கைகளையும் சேர்த்துக் கொண்டு கேட்டாள். அந்தக் கணத்தில் அவன் எங்கோ காற்று வெளியில் சிறகடித்துப் பறந்து திரிவதுபோன்ற நிலையை அடைந்ததாக எண்ணிக்கொண்டான்.

"இல்லையே" என்றான்.

"நான் சொல்கிறேன். கேட்கிறீர்களா ?"

"என்ன சொல்கிறாய் ?"

"என் கதையை."

"வேண்டாம். நீதான் எனக்கு வேண்டும்" என்று அவள் இடையைச் சுற்றி வளைத்தான். அவள் ஏதும் மறுப்பு சொல்லவில்லை. இனி இன்பம் என்று எண்ணினான் ஞானசம்பந்தன்.

"தடதட" என்று கதவு தட்டப்படும் ஒலி அந்த நள்ளிரவில் அவன் காதுகளைக் கிழித்தது.

"சார் சார்" என்ற விளி அந்த இரக்கமற்ற கதவு ஒலியோடு சேர்ந்து வந்தது.

"என்ன இந்நேரத்தில் ?" என்று கேட்டான் ஞானசம்பந்தன்.

"நான்தான்சார்" மூலைஆளின் குரல் என்பதனை உணர்ந்து கொள்ள முடிந்தது. ஆனாலும் ஞானசம்பந்தன் ஒன்றும் அறியாதவனைப்போல்.

"நான்தான் என்றால் ?" என்று கேட்டான்.

"சார்-தயவு செய்து திறவுங்களேன் சொல்கிறேன் நான் தான் சார். கொஞ்சம்" என்று அந்த ஆள் கெஞ்சினான்.

சரி தொலையட்டும் என்று ஞானசம்பந்தன் கதவின் தாழ்ப்பாளை அகற்றுவதற்குள் கதவையே தள்ளிக்கொண்டு அந்த ஆள் உள்ளே விழுந்தான்.

"என்னப்பா இந்த நேரத்தில். மெதுவாகச் சொல்"

"இல்லை சார் இல்லை. மன்னிக்க வேண்டும்"

"என்ன, சொல்லேன்."

"உங்கள் பெயர் அருணசலம் இந்த அம்மாள் அமுதவல்லி உங்கள் மனைவி" என்று குளறினான்.

அவன் உடல் வெடவெட என்று நடுங்கிக்கொண்டிருந்தது. நா குளறியது. மேல் மூச்சும் கீழ் மூச்சும் வாங்கியது. ஞானசம்பந்தனுக்கு ஒன்றும் விளங்கவில்லை.

"என்னய்யா என்ன ஏதாவது தாகசாந்திக்குச் சாப்பிட்டாயா ?"

"சார் கிண்டல் செய்யாதீர்கள் சார். வேறு வழியே இல்லை"

ஞானசம்பந்தன் பொறுமையை கொஞ்சங் கொஞ்சமாக இழந்து கொண்டிருந்தான்.

"என்னதான் சொல்லுகின்றாய். புரியும்படியாகச் சொல்லித் தொலை ஐயா" என்று சீறினான்.

"வேறு ஒன்றும் இல்லை சார். இந்த வேலை போலீசுக்குத் தெரியாமல் நடக்கிறது. யாரோ உளவு சொல்லி இன்றுபோலீஸ் சோதனைக்கு வந்துவிட்டார்கள் அதோ வேறு பக்கம் அவர்கள் சோதனை நடக்கிறது. அங்கே எல்லாம் ஒன்றும் இல்லை. நீங்கள்தான் இங்கே. இந்தப் பெண்ணைக் கொண்டு வந்த அந்த ஆளும் எங்கோ சினிமாவுக்குப் போய்த் தொலைந்தான்."

அவன் முடிக்கும் முன்னமே ஞானசம்பந்தனின் உடல் நடுங்கத் தொடங்கிவிட்டது. உடல் எல்லாம் வியர்வையில் நனைந்து சோர்வு மிகுந்தது. போலீஸ் என்ற சொல்லைக் கேட்டதும் தீக்குள் கையை வைத்ததுபோல திடுக்கிட்டான். என்ன ஆகுமோ என்று குழம்பினான், நடுங்கினான். இது பெரிய குற்றம் என்று தெரிந்தும் ஏகாம்பரம் ஊட்டிய துணிவு அவனை இங்கெல்லாம் இழுத்து வந்தது. என்ன செய்வது என்று அறியாமல் திகைத்தான்.

"இப்போ என்னப்பா செய்யச் சொல்லுகின்றாய் ?"

"அதான் சார் இவ்வளவு நேரம் நான் சொன்னது. இவளைக் கூட்டிவந்த ஆள் பதிவுப் புத்தகத்தில் தன் பெயர் அருணசலம் என்றும், இவள் அவன் மனைவி என்றும் எழுதி வைத்திருக்கிறான். அவன் எங்கோ போய்த் தொலைந்தான். இப்போது தப்பிக்க வேண்டுமானால் ஒரே வழிதான் இருக்கிறது. அது, நீங்களே அருணசலம் இது உங்கள் மனைவி. சும்மா பட்டணம் பார்க்க வந்து தங்கியிருப்பதாக போலீஸ் வந்து கேட்டால் சொல்லிவிடுவது" என்றான் அவன்.

ஞானசம்பந்தன் ஒன்றும் பதில் சொல்லவில்லை. அமுதவல்லியின் முகத்தைப் பார்த்தான். அந்த முகத்தில் பரிதாபம்தான் இருந்தது. ஏதும் அறியா பச்சைக் குழந்தையின் சாயல் இருந்தது. ஞானசம்பந்தன் சும்மா இருப்பதைக் கண்டதும் அந்த மூலை ஆள் நடுங்கினான். அவனுக்கு இவன் ஒருவனால் ஓட்டல் போய் விடுமே என்ற கவலை வந்து விட்டது.

தொடரும்



எங்கும் கிடைக்கும்.

— 6ம் பக்கத் தொடர்ச்சி —

கொள்கிறன்; என்ன குறை அவனுக்கு வருகிறது! காசை மன்னர்கள் படைத்தார்கள்! அந்த மன்னர்களையே படைத்த மகேஸ்வரனுக்குக் காசு எதற்கு?—இப்படி யாராவது அந்தச் சோலையாண்டவர் கோயிலுக்குப் பக்கத்தில் நின்று சொன்னல், சும்மா விடுவார்களா? ஆலயத்தைச் சுற்றி எலுமிச்சம் பழத்தோடு ஊன்றி வைத்திருக்கிற ஈட்டிகளைத் தூக்கிவந்து அல்லவா குத்துவார்கள். போலீசார்கூட அவர்களை நெருங்க அஞ்சுவார்கள்! "ஆண்டவன் அருள்! சோலையப்பன் மனம் கோணிவிட்டது! அதுதான் இந்த அனர்த்தம்!" என்று துப்பாக்கி தாங்கிய போலீஸ் படை கூட திரும்பிப் போய்விடும்!

அரசியலில் சில பேர் திடீரென்று மின்னுவதுண்டு. அதற்கு ஏதாவது காரணமிருக்கும். ஆனல் இந்தச் 'சோலையாண்டவருக்கு' வந்த 'மார்க்கெட்'-இருக்கிறதே இது கண்டறிய முடியாத ஆச்சரியம்!

★

அன்று ஆடி வெள்ளிக்கிழமை! கோயில் பூசாரி கிழக்கு வெளுக்கு முன்னடியே பூசைசெய்ய ஆரம்பித்துவிட்டார். வண்டிகளும், கார்களும் குவிந்துகொண்டிருந்தன. அரசாங்கக் கஜானவில் பணம் சேருவது போல் ஆலயத்து உண்டியல் நிறைந்துகொண்டு வந்தது. திருப்புத்தூர் தாலுகாவிலிருந்து கோயிலுக்கு வந்த வண்டிகள் காலை பதினேரு மணிக்குமேல் 'சுவாமி தரிசன'த்தை முடித்துக்கொண்டு ஊர் திரும்பின. ஒரே பகுதியைச் சேர்ந்த இருபது வண்டிகள் ஒரே வரிசையாக வந்தால் ஒற்றுமை தானக வலுப்பெற்று விடுகிறது. ஒருவர் தண்ணீர் குடித்தால், எல்லோரும் தண்ணீர் குடிப்பார்கள். யாராவது ஒருவர் இறங்கி நடந்தால், வண்டிக்கு ஒருவர் இறங்கி நடக்க ஆரம்பித்துவிடுவார்கள்.

வண்டிகள் 'சூரைக்குடி' என்ற கிராமத்தை அடைந்தன. திரும்பும் பாதையில் முதலில் குறுக்கிடும் கிராமம் அதுதான். அந்தக் கிராமம் பாதைமேல் இருக்கிறது. நாட்டுக்கோட்டைச் செட்டியார்களின் 'குலதெய்வம்' இருக்கிற ஊர்களில் அதுவும் ஒன்று. அங்கே அவர்களுக்கு ஒரு 'விடுதி' இருக்கிறது. போகும்போதும், வரும்போதும் தங்கி ஓய்வு பெறுவதற்கு அந்த விடுதி பெரிதும் பயன்பட்டது.

திருப்புத்தூர்காரர்கள் அந்த விடுதியில் தங்கி கட்டிச்சோற்றை அவிழ்த்தார்கள்.

அந்த விடுதிக்குச் சற்று தூரத்திலிருந்த புழுதிமேட்டில் ஒரு சிலை வைக்கப்பட்டிருந்தது. அந்தச் சிலை ஒரு அழகான பெண்ணின் சிலை. அந்தச் சிலையின் கதையைக் கேட்டவர்களெல்லாம், சோலையாண்டவர் கோயிலிலிருந்து கொண்டுவந்த குங்குமத்தை அதற்கு வைப்பார்கள் போலும்! இல்லாவிட்டால் அந்தச் சிலையின் முகமெல்லாம் குங்குமம் இருக்குமா? செத்துப்போன பெண்ணை உயிரோடிருக்கும் பெண்கள் வாழ்த்துகிருர்கள்; வணங்குகிருர்கள். 'உத்தமி, பத்தினி' என்று கூடப் புகழ்கிருர்கள். ஆனல் அதே பெண் உயிரோடிருந்தால் பெண்கள் வாழ்த்துவார்களா? பசிக்கு உணவு தேவையில்லாதிருந்தால் பச்சை மாமிசத்தைக்கூட விலங்குகள் விரும்புவதில்லை! ஆனல் ஒரு பெண்ணை இன்னெரு பெண் பார்க்கும்போது அந்தப் பார்வையில் தான் எத்தனை அர்த்தங்கள்!

கட்டிச்சோற்றை அவிழ்த்துச் சாப்பிட உட்கார்ந்த திருப்பத்தூர் பிரயாணிகள் அந்தச் சிலையைப் பார்த்ததும் அதைப் பார்ப்பதற்காகப் போனர்கள். கல் என்றலே, அது கடவுள்தான் என்று முடிவு கட்டும் தமிழ்ப்பெண்கள், ஒரு அழகான பெண்ணின் சிலையைப் பார்த்தால் விடுவார்களா? நாச்சியார் என்றுர்கள், அம்மன் என்றுர்கள் அகிலாண்டஈஸ்வரி என்று கன்னத்தில் போட்டுக்கொள்ளத் தொடங்கினர்கள். ஒரு இடத்தை பெருமைப்படுத்த வேண்டுமானலும், கேவலப்படுத்த வேண்டுமானலும் பெண்கள் நினைத்தால் போதும்! நான்கு நாட்களுக்குப் பட்டினி கிடந்து விரதமிருந்து, ஒரு கல்லைச் சுற்றி, நாளைக்கு பத்து வலம் வந்தால் மறுநாளைக்கே அந்தக் கல்லுக்கு ஒரு பூசாரி நியமிக்கப்பட்டு விடுகிறன். இதைப் போலவே, ஒரு புளியமரத்தைக் காட்டி 'இந்த மரத்தில் பேய் இருக்கிறது' என்று ஒரு பெண் சொல்லிவிட்டால் அந்த இடம் 'பேய் உலவும்' இடமாக பெயர்



தற்கொலைக்குக் காரணம்?

பெற்றுவிடுகிறது. குழந்தைகள் விளையாடும் அழகிய பூங்காவாக இருந்தாலும் அதற்குப் பிறகு அந்த இடத்திற்கு போலீஸ்காரர்கள்கூடப் போவதில்லை.

சூரக்குடியிலிருப்போருக்கு அந்தச் சிலையின் கதை தெரியும். அது ஒரு சாதாரணப் பெண்ணின் சிலைதான் - கள்ளர்வீட்டுக் குஞ்சரத்தின் சிலைதான் என்பதை அறிவார்கள். வழிப்போக்கர்களுக்குத் தெரியுமா? சோலையாண்டவரைப்போல் இதுவும் ஒரு **'சூரைக்குடி அம்மன்'** என்றுதான் நினைத்தார்கள்!

திருப்புத்தூர் பிரயாணிகளில் இருந்த ஒரு நரை விழுந்த கிழவி அவளுடைய பேரன் பேத்திகளை பக்கத்தில் அழைத்து, அந்தச் சிலையின்மீது தூவிக்கிடந்த குங்குமத்தை எடுத்து குழந்தைகளுக்கு வைத்தாள். உள்ளூர்க்காரர்களுக்கு இது வாடிக்கையான வேடிக்கையாகப் போய்விட்டதால் யாரும் இந்த நடவடிக்கைகளைக் கவனிப்பதில்லை.

1945-க்குப் பிறகு அந்த வழியாக போகிறவர்களெல்லாம் குஞ்சரத்தின் சிலையைப் பார்க்காமல் போவதில்லை. அந்தப் பாதைக்குப் பக்கத்தில், மிகப் பெரிய சரித்திரப் பின்னணியோடு கூடிய சம்பவம் ஏதாகிலும் நடந்திருக்க வேண்டுமென்றே அனைவரும் எண்ணினர்கள். அதே பாதையில் **ஓடாத செக்கும், ஒற்றைக்கால் மண்டபமும், கூவாத சேவலும், ஈனுத வாழையும்** இருக்கின்றன வல்லவா! ஆனல் மற்ற கற்சின்னங்களுக்கும் குஞ்சரத்தின் சிலைக்கும் தொடர்பு இருப்பதாகத் தெரியவில்லை. யாரும் சொல்லவும் இல்லை. குஞ்சரம்-கள்ளர்குல மணிப்புரு! கௌரவத்திற்காகவே வாழும் தமிழ்ச் சமுதாயத்தின் ஒரு அங்கம்! அவளுடைய சிலைதான் அது!

- 1 -

வெள்ளைக்காரர்கள் கிழக்கிந்தியக் கம்பெனியை கலைத்துவிட்டு, தனித் தனியாகப் பிரிந்துகிடந்த சமஸ்தானங்களை ஒரு மூட்டையாகக் கட்டி 'இந்தியா' என்று பெயர் வைத்த காலம்! விக்டோரியா மகாராணியின் அறிக்கை நாடெங்கும் பெரிய அதிர்ச்சியைக் கிளப்பிக் கொண்டிருந்தது. அப்போது, பள்ளத்தூர், கோட்டையூர், ஆத்தங்குடி, வட்டாரத்தில் **சிங்கப்பெருமாள்** அம்பலகாரர் மிகுந்த செல்வாக்கோடு இருந்தார். அவருக்கு அம்பலகாரர் பட்டம் உண்டு. அம்பலகாரர் என்றல் அதிகாரம் நிறைந்தவர் என்று பொருள். வெள்ளைக்காரர்கள் புதிதாக நாடு பிடிக்க ஆரம்பித்திருந்ததால் ஆங்காங்கே மக்களிடத்திலே செல்வாக்குப் பெற்றவர்களிடத்தில் பணிவும் அன்புமுள்ளவர்களாக அவர்கள் நடந்துகொண்டார்கள். சிவகங்கைச் சீமைக்கும், புதுக்கோட்டைச் சீமைக்கும் இடையிலிருந்த அம்பலகாரருக்கு கீர்த்தி வளர்ந்தது. கம்பெனி அதிகாரிகள் துப்பாக்கிகளையும், வெடி மருந்துகளையும் பாதுகாப்புக்காக அவருக்குக் கொடுத்திருந்தார்கள். வேட்டைக்குப் போவதற்கு இரண்டு குதிரைகள் வேறு அவருக்குத் தரப்பட்டிருந்தன. வருவோர்க்கெல்லாம் முயல் கறியும், மான்கறியும், சமைத்துப் போட்டார் சிங்கப்பெருமாள்.

அம்பலகாரருக்கு செல்வாக்குப் பெருக ஆரம்பித்த காலத்தில் குஞ்சரத்திற்கு ஐந்து வயது. புத்திசாலிகள் தாயில்லாப்பிள்ளையைக் கண்டித்து வளர்க்கிருர்கள். மற்றவர்கள் செல்லக்கிளியாக்கி விடுகிருர்கள். குஞ்சரம் தாயில்லாக் குழந்தையானலும் தனது குடும்பத்தின் பரம்பரைக் கௌரவத்தை மறவாமல் நடந்துவந்தாள். அந்தச் சின்ன வயதிலேகூட அவள் ஆண்களோடு அதிகம் பேசுவதில்லை. வீட்டு வேலைக்காரர்களோடு பேசுவதற்கே அவள் வெட்கப்பட்டாள். நல்ல வயதில் வரவேண்டிய புத்தி, சில பெண்களுக்கு நடைவண்டி யோட்டும் பருவத்திலேயே வந்துவிடுகிறது. வேதாந்திகள் இதற்குக் காரணம் சொல்லும்போது 'குரு கோபுரத்திலிருக்கிறன்' என்கிருர்கள். டாக்டர்கள், பெற்றேர்களின் ரத்தத்தில் உள்ள சக்தியும், தாய்ப்பாலின் குணச்சிறப்பும் என்கிருர்கள். மனேதத்துவ அறிஞர்கள் இதற்கான காரணத்தை இன்னும் கூறவில்லை.

அதிகாரம் சொந்த பணபலத்தினல் வரும்போது, தன்னடக்கமுள்ளவர்கள் அந்த அதிகாரத்தைப் பாதுகாத்துக்கொள்கிருர்கள். அந்த அதிகாரத்தைத் தந்த பணத்தை மேலும் சம்பாதிக்கமுடியும் என்ற உறுதிஅவர்களுக்குத் துணைபுரிகிறது. ஆனல் மற்றவர்களை நம்பி அதிகாரம் செய்வோர் அந்த அதிகாரத்தாலேயே அழிக்கப்படுகிருர்கள். மனித குணம் ஆராய்ந்தறிய முடியாதது. நண்பர்களாக இருக்கும்போது செத்த பாம்புபோல் கிடப்பார்கள். எதிரிகளாகிவிட்டால் படம் எடுத்து ஆடுகிருர்கள். நண்பன் பகைவனுக மாறும்போதுதான் அவன் மனதில் புதையுண்டு கிடக்கும் தீய சக்திகள் உருவம் பெறுகின்றன.

சிங்கப்பெருமாள் பிறந்ததிலிருந்தே அதிகாரத்தில் ஊறித்திளைத்தவர். ஆனலும் வெள்ளையதிகாரிகளின் உறவு கிடைத்த பின்பு பொதுக் காரியங்களை ஊரைக்கூட்டி வைத்துக் கேட்கும் நாட்டுக் கட்டுப்பாட்டைக் கூட அவர் மறந்துவிட்டார். அம்பலகாரர் என்ற பட்டம் போய் 'பெரிய முதலாளி' என்று வந்துவிட்டது. அப்படியானல் சின்ன முதலாளி உண்டா? உண்டு! கம்பெனி அதிகாரிகளெல்லாம் சின்ன முதலாளிகள்! எத்தனை நாளைக்கு?

சூரைக்குடியில் அரண்மனை போன்ற மாளிகை எழும்பிற்று. மானும் மயிலும் ஆடும் சோலைகள் வளர்ந்தன. ஆட்டமும், பாட்டமும் அபிநயக் கச்சேரிகளும் அன்றுடம் நிகழ்ந்தன.

குஞ்சரம் இப்போது பருவம் அடைந்த பெண். கூந்தல் அழகும், கூரிய கண்களின் பார்வையழகும், நடையழகும் ஒடிந்து விழும் இடையழகும் பெற்றுவிட்ட அவள் ஜன்னல் வழியாக தெரியும் உலகத்தை மட்டுமே தெரிந்து கொண்டிருந்தாள். ஜமீன்தாரின் மாளிகைகளில் போடப்படும் பட்டுத் திரை சிங்கம்பெருமாள் அம்பலக்காரரின் மாளிகைக்கு வந்துவிட்டது.

சூரைக்குடியில் ஒருநாள் ஒரு பெரிய வெள்ளைக்காரத் துரைக்கு விருந்து நடைபெற்றது. தமிழ்நாட்டுக்கே உரித்தான கரகாட்டம், ஒயிலாட்டம், குறவன் குறத்தி ஆட்டம் முதலியன வெள்ளையர் முன்னிலையில் நடத்திக்காட்டப்பட்டன. சிங்கப்பெருமாள் இந்த விருந்தை மிகச் சிறப்பாக நடத்திக் காட்ட எண்ணி ஆடி ஓடிக்கொண்டிருந்தார்.

இரவு இரண்டு மணி இருக்கும். விருந்து முடியவில்லை. சிங்கப்பெருமாளின் மெய்க்காப்பாளனை **மான் கொம்பு** ரத்தம் கொட்டக் கொட்ட ஓடி வந்தான்.

- முடியவில்லை -

## வள்ளுவர் பண்ணை

சென்னை பிராட்வேயில் "வள்ளுவர் பண்ணை" என்னும் பெயரில், புதிய புத்தக வெளியீட்டு — விற்பனை நிலையம் 10-2-58 அன்று திறந்து வைக்கப்பெற்றது.

புரட்சிக் கவிஞர் பாரதிதாசன், கவிஞர் கம்பதாசன், பேராசிரியர் டாக்டர் மு. வரதராசனர், ஏ. வி. பி. ஆசைத்தம்பி, புலவர் கோவிந்தன், சாண்டில்யன், சிரஞ்சீவி, ஆர். எஸ். மணி முதலியோரும் மற்றும் பல எழுத்தாளர்களும் புத்தக வெளியீட்டு விற்பனையாளர்கள் பலரும் சென்னை நகரப் பிரமுகர்களும் விழாவில் கலந்துகொண்டனர். உரிமையாளர் **ந. பழநியப்பன்** அவர்கள் அனைவரையும் வரவேற்று உபசரித்தார்.

> இலக்கிய ஆர்வமும் மறுமலர்ச்சி எண்ணமும் கொண்ட தமிழ் இளைஞர்களின் இதயங்களிலிருந்து நீக்கமுடியாத இடத்தைப் பெற்றவர் **முருகு சுப்பிரமணியன்**. திராவிடருக்காக முதல் முதலில் இலக்கியப் பத்திரிகையைத் தொடங்கி தமிழ் உலகிற்கு புதிய பரம்பரையைக் குடியேற்றி வைத்தவர் அவரே. எனக்குத் தமிழாசிரியர் பன்மொழிப்புலவர் அப்பாதுரையார் என்றால், எனது எழுத்தார்வத்தை ஊக்குவித்தவர் முருகு சுப்ரமணியம்தான் என்று சொல்லிக்கொள்வதிலே மகிழ்ச்சியடைகின்றேன். ஏராளமான எழுத்தாளர்களை தயாரித்து விட்ட 'பொன்னி'யின் காவலராக இருந்த முருகு அவர்கள், சிங்கப்பூர், மலாயா வானொலியில் பேசிய மூதுரை விளக்கத்தை இங்கே வெளியிட்டிருக்கிறோம். முருகு அவர்களின் இதுபோன்ற வானொலிப் பேச்சுக்களும், கட்டுரைகளும் தென்றலில் இனி அடிக்கடி இடம் பெறும்.
>
> —**கண்ணதாசன்.**

# தண்ணீரும் இளநீரும்!

★ **முருகு சுப்பிரமணியன்** ★

தென்னைமரத்தை நீங்கள் எல்லோருமே பார்த்திருப்பீர்கள் பட்டணங்களிலுள்ள பிள்ளைகள் கூடக் கண்டிப்பாகத் தென்னையைக் கவனித்திருப்பார்கள். தென்னைமரம் என்று சொன்னவுடன் உங்களுக்கு முதலில் எது நினைவுக்கு வருகிறது? அதன் உயரந்தான் உங்கள் உள்ளத்தில் பதிந்திருக்கும். 'தென்னைமரம்போல் வளர்ந்திருக்கிறான்' என்று ஆறடி உயரமுள்ளவர்களைக் குறிப்பிடுவது தமிழ் மரபு.

தென்னைமரம் தேங்காய் தருகிற மரம். தேங்காய்த் துருவல் சேர்க்காமல் நம் தாய்மார்கள் சமையல் செய்வது அரிது. தேங்காயை உடைத்து வைத்து இறைவனை வழிபடுவர் இந்து மதத்தினர். கடவுளுக்கு உகந்தது தேங்காய் என்பது நம்பிக்கை. தேங்காயைப் பற்றி இன்னும் எவ்வளவோ சொல்லலாம்.

ஒரு பென்சிலும் தாளும் எடுத்துக்கொண்டு தேங்காயின் பயன்களை வரிசையாக எழுதுங்கள். எத்தனையோ பக்கங்கள் எழுத வேண்டியிருக்கும்! அயர்ந்து போய் விடுவீர்கள்.

தேங்காயைச் சொல்லும்போது இளநீர் உங்கள் உள்ளத்தில் ஊசலாடும். கொளுத்தும் உச்சி வெய்யிலில் இரண்டு இளநீர் வெட்டித் தரச் சொல்லிக் குடித்தால் எவ்வளவு இன்பமாயிருக்கும்! மலாயாவில் இளநீர் விற்கிறவர்கள் சீனி போட்டுக் கலக்கித் தருகிறார்கள். பள்ளிக்குழந்தைகளுக்கு இளநீரும் கரும்புச் சாறும் மிக எளிதில் கிடைப்பவை. இளநீர் இயற்கையிலேயே இனிப்பான பானம். மலாயாவில் இளநீர் அவ்வளவு இனிப்பாக இல்லாததாலேயே அதில் சர்க்கரை போட்டுச் சாப்பிட வேண்டியிருக்கிறது. கரும்புச் சாற்றுக்கும் அதுபோல இங்கே சர்க்கரை போடுகிறார்கள்! வேடிக்கைதான்!

### அனைத்தும் பயன்

தென்னை, மனிதனுக்கு நிறைந்த பயன் தருகிற மரம். தென்னைமரத்தில் வீணாகின்ற பகுதி எதுவும் இல்லை. தென்னைஓலை கொண்டு பின்னப்படும் தென்னங்கீற்று பந்தல் போட உதவுவது தென்னை மட்டை அடுப்புக்குத் தீ மூட்ட உதவும். தேங்காய் மட்டையிலிருந்து கயிறு தயாரிக்கிறார்கள். தென்னையின் அடிமுதல் நுனிவரை அனைத்துமே மனிதனுக்குப் பயன்படுபவை.

மனிதனுக்காகவே பிறந்தது தென்னை என்றுகூடச் சொல்லலாம். ஒரு பெரிய தென்னந்தோப்பு சொந்தமாக இருந்தால் ஆண்டுதோறும் நல்ல வருமானம் கிடைக்கும். தென்னையிலிருந்து கள் இறக்குவதும் பதநீர் இறக்குவதும் தம்பி தங்கைகள் அறிந்த செய்தி.

தென்னைமரத்தைப் பற்றிய இவ்வளவு அதிகம் பேசவேண்டிய காரணமென்னவென்று நீங்கள் யோசிக்கக்கூடும்.

தமிழ் மூதாட்டி ஔவையாரைப் பற்றி உங்களுக்குத் தெரியும். அந்தத் தமிழ்க் கிழவி எழுதிவைத்த ஆத்திசூடி, கொன்றைவேந்தன் முதலிய நீதி நூல்களை நீங்கள் படித்திருக்கிறீர்கள். மூதுரை என்னும் நீதி நூலும் ஔவைப்பாட்டி இயற்றியதுதான். மொத்தம் முப்பது பாட்டு. ஒவ்வொன்றும் அருமையான முத்துக்குச் சமமானது. உயர்ந்த நீதிகளை அழகாக எடுத்துரைக்கும் நூல் மூதுரை. இதற்கு வாக்குண்டாம் என்று இன்னொரு பெயரும் உண்டு. முதற் பாட்டு 'வாக்குண்டாம்' என்று தொடங்குகிறது. அதனாலேயே இந்நூலுக்கு இப் பெயர் வழங்குகிறது.

தென்னையின் சிறப்பை மூதுரை குறிப்பிடுகிறது. நன்றிக்குஉறைவிடமாகத் தென்னைமரத்தின் இயல்பை ஔவையார் படம் பிடித்துக் காட்டுகிறார்.

நன்றி என்றவுடன் வாலைக் குழைத்துவரும் நாய்தான் நம் கண்முன் நிற்கும். 'நாய் நன்றியுள்ள பிராணி' என்று முதல் வகுப்பிலேயே பாடம் சொல்லித் தந்துவிடுகிறார்கள். நாயின் விசுவாசம், நன்றியுணர்வு பற்றி எத்தனையோ கதைகள். வளர்த்த எஜமானுக்குத் துரோகம் இழைக்காது நாய்; அது மட்டுமன்று, தன்னை வளர்த்தவருக்கு தீங்கு நேரவும் அது அனுமதியாது. மாதம் நூறு வெள்ளி சம்பளம் கொடுத்துக் காவலுக்கு வைக்கும் ஆறறிவு படைத்த மனிதன்கூடச் சந்தர்ப்பத்தில் துரோகம் செய்துவிடுகிறான்; பெற்ற பிள்ளை தாய்க்குத் துரோகம் செய்வதும் அரிய நிகழ்ச்சிகள் எனினும் நடப்பவை. ஆனால் நாய் தன்னை வளர்த்தவனுக்குக் கேடு செய்ததாகக் கதையில்கூட நாம் கேள்விப்பட்டதில்லை. நன்றிக்கு மதிப்புத் தருவதில் நாய் அவ்வளவு சிறந்து விளங்குகிறது.

### தென்னையின் சிறப்பு

தென்னைக்கும் அத்தகைய சிறப்பு உண்டு என்று மூதுரை நமக்குத் தெளிவுபடுத்துகிறது. அந்த மூதுரைப் பாட்டு இதுதான்.

**நன்றி ஒருவர்க்குச் செய்தக்கால்**
**அந்நன்றி**
**என்று தருங்கொல் என**
**வேண்டா-நின்று**
**தளரா வளர்தெங்கு**
**தாளுண்ட நீரைத்**
**தலையாலே தான் தருதலால்.**

ஒருவனுக்கு உதவி செய்கிறீர்கள். அந்த உதவிக்குக் கைம்மாறாக அவன் உங்களுக்குத் திரும்ப உதவுவானா என்று ஐயப்படுகிறீர்கள். நல்ல நண்பனுக்குச் செய்யும் உதவிக்குப் பலன் கிடைப்பது திண்ணம்; அதிலே ஐயுற வேண்டியதில்லையென்பது முதல் இரண்டு வரிகளின் கருத்து.

நின்று தளரா வளர்தெங்கு தாளுண்ட நீரைத் தலையாலே தான் தருதலால், நன்றி ஒருவர்க்குச் செய்தக்கால், அந்நன்றி என்று தருங்கொல் என வேண்டா—இவ்வாறு அமைப்பை மாற்றிக்கொண்டால் பொருள் எளிதில் விளங்கும்.

தென்னை மரத்தின் தாள் அதன் அடிப்பாகம். தென்னை மரத்திற்குத் தண்ணீர் பாய்ச்சுகிறோம் அல்லவா? வேர் மூலமாகத்தான் தென்னை அந்த நீரைக் குடித்துவளர்கிறது. அவ்வாறு காலால் உண்ட நீரைத் தென்னை தன் தலையாலே தருகிறதென்கிறார் ஔவையார்.

நாம் ஊற்றியது வெறுந் தண்ணீர். அதற்கு விலைமதிப்பே இல்லை. தென்னை நமக்குத் தருவதோ இளநீர்—சுவையான இளநீர்—குடிக்கக் குடிக்கத் தெவிட்டாத இளநீர்!

நாம் தரும் தண்ணீருக்குத் தென்னை நமக்குக் கைம்மாறாக அளிப்பது இளநீர்! தண்ணீரைக் குடிக்கும் தென்னை, நாம் குடிக்க, இனிக்கும் இளநீரைத் தருகிறது. எத்தனை சீரிய பண்பு! நன்றி மறவாத செயல்! தான் வளரத் தண்ணீர் வார்த்த மனிதனைத் தென்னை மறந்துவிடவில்லை. வளர்ந்து பெரிய மரமானவுடன் இளநீர்க் காய்களைக் குலைகுலையாக வழங்கி வளர்த்தவர்க்கு நன்றியை அது திரும்பச் செலுத்திவிடுகிறது.

ஔவையார் சுட்டிக் காட்டுகிற அடுத்த உண்மை நினைக்க நினைக்க இன்பம் பயப்பது. நாம்தென்னைக்கு நீர் பாய்ச்சுவது அதன் அடியில்—அதாவது காலில். அது நமக்குத் தரும் இளநீரோ அதன் காயிலுள்ளது. காய் தலையில் காய்ப்பது.

### உயரிய பண்பு

காலால் உண்ட நீரைத் தலையாலே திருப்பித் தருகின்றதென்னையின் உயரிய பண்பையே மூதுரை எடுத்துக் காட்டுகிறது.

'நீங்கள் காலால் இடும் வேலையைத் தலையால் செய்யக் காத்திருக்கிறேன்' என்று உண்மை அன்பு கொண்ட வேலைக்காரர்கள் தங்கள் முதலாளிகளிடம் சொல்லுவது வழக்கம். தென்னைதான் காலால் பெறுகின்ற பயனைத் தலைவணங்கித் திருப்பித் தருகிறது. பெறுவது தண்ணீர் தருவதோ இளநீர்!

தாளுண்ட-நீரைத் தலையால் தருகிறது தென்னை; ஆகவே நல்லவர்களுக்குச் செய்கின்ற உதவிக்குக் கைம்மாறு கிடைப்பது திண்மை. அவர்கள் திரும்ப விரைந்து உதவுவார்கள் என்பது கருத்து.

நல்லவருக்கு உதவி செய்யும்போது அவர்கள் நமக்கு உதவுவார்களோ என்று ஐயப்பட வேண்டாம். அவர்கள் நிச்சயமாக உதவுவார்கள். உங்கள் உதவிக்கு ஒன்றுக்கு மும்மடங்காகப் பலன்கிடைக்கும். தென்னையை அதற்குச் சான்று செப்புகிறார் ஔவையார்.

நல்லவர்களுக்குச் செய்கின்றஉதவிக்குப் பலன் திண்ணமாகஉண்டு.

ஔவையார் கூறும் நீதி என்ன? நல்லவர்களுக்கு உதவுங்கள் என்று அறிவுறுத்தும் ஔவைப் பாட்டி உதவி பெற்றவர்கள் நன்றி மறக்கக் கூடாது, திரும்ப உதவி புரிய வேண்டுமென்றும் வலியுறுத்துகிறார். உதவியும் அதற்குத் திரும்பச் செய்கின்ற நன்றியுதவியும் இயல்பானவை என்பதையே தென்னையின் அமைப்பு காட்டுகிறது.

தென்னைக்கு மனிதர்களைப்போல ஆறறிவு இல்லை. நன்றி மறக்கக் கூடாதென்னும் நீதியை அது படித்ததில்லை; எனினும் அது இயல்பாகவே நன்றியின் உறைவிடமாகக் காட்சியளிக்கிறது.

ஒரு மரம் மனித குலத்துக்குச் சொல்லாமல் சொல்லும் நீதி இது! தென்னை கற்றுத்தரும் பாடம் நன்றி மறக்கக்கூடாது என்பது. உதவி பெறுபவர்கள் விரைந்து மாற்றுதவியைப் புரிவது உலக இயற்கை. தென்னை மரம் தன் செயலால் பறை சாற்றுகின்ற உயரிய நீதி இதுதான். உதவுக—உதவி கிடைக்கும் என்னும் உண்மையைத் தென்னையைக் காட்டி அறிவுறுத்தும் மூதுரை இலைமறை காய்மறையாக மற்றொரு நீதியையும் சொல்லிவிடுகிறது.

### சிறந்த உதவி

கைம்மாறு எதிர்பாராமல் செய்யப்படுவதே சிறந்த உதவி. உதவி செய்கின்றவர்களுக்கு அத்தகைய உள்ளம் வேண்டும். பலன் கிடைக்குமா என்றெல்லாம் யோசிக்கக் கூடாது. உதவி புரிவது உன் கடமை. அதற்குப் பலன் இயல்பாகவே உனக்குக் கிடைக்கும். ஆகவே தயங்காமல், மயங்காமல் பிறருக்கு உதவுகவென்று ஊக்குகிறது மூதுரை.

நன்றிமறவாமைபற்றி நீங்கள் எத்தனையோ கதைகளைப் படித்திருப்பீர்கள். கீரிப்பிள்ளை பாம்பைக் கடித்துக் குழந்தையைக் காப்பாற்றிய கதை எல்லோருக்கும் தெரியும்.

மனிதனுக்கு நன்றியுணர்வு இயல்பாக அமைந்திருக்கிறது. அதனைச் சிறுவர் சிறுமிகள் வளர்த்துக் கொள்ள வேண்டும். பிறருக்கு உதவுகின்ற எண்ணமும் அதனைச் செயலில் காட்டுகின்ற ஊக்கமும் வளர வேண்டும். அதே சமயத்தில் உதவியவர்களை மறவாத நன்றியுடைமையும் நம் பண்போடு சேர்ந்து வளர வேண்டும்.

தமிழ் நீதிநூல்கள் நன்றியுடைமையைப் பெரிதும் போற்றுகின்றன. 'எந்நன்றி கொன்றார்க்கும் உய்வுண்டாம் உய்வில்லை—செய்ந் நன்றி கொன்ற மகர்க்கு' என்பது குறள். நன்றியை மறப்பது பெரும் பாவம், அதற்குப் பரிகாரமே கிடையாது என்பதே குறளின் கருத்து.

தாளுண்ணும் நீரைத் தலையால் தருகின்ற தென்னையை வாழ்த்துவோம்; நம் பண்பில் நன்றியுணர்வை வளர்த்துக் கொள்வோம். ★

# கேள்விப் பெட்டி

## பன்மொழிப்புலவர் பதில் தருகிறார்

தமிழ் நாடன்,
மேட்டுப்பாளையம்.

**"தமிழ்நாடு ஓர் மட்டமான நாடு: உலகிலேயே மிகவும் மோசமான சமூகம் தமிழர் சமூகம்தான். வெறுமனே வாயால் பேசி என்ன செய்வது. கேவலம், ஒரு ரூபாய் சம்பளத்தை ஒன்றரை ரூபாயாக உயர்த்த வேண்டும் என்பதற்காக "ஸ்ட்ரைக்" குத்து, வெட்டு கொலையா? சேச்சே! நான்கூடத்தான் தமிழ் நாடைப்பற்றி புகழ்ந்து எழுத நினைத்திருந்தேன். ஆனால் இப்போதோ தமிழ்நாட்டை விட்டே ஓடிவிடலாமா என்று தோன்றுகிறது. அப்பப்பா! மிக மட்டமான சமூகம் தமிழர் சமூகம்"**

**மேலே காணப்பட்டவை, தமிழ் நாட்டில் வசிக்கும் தமிழரின்- பாரதி என்றால் உயிர் விடும் பாரதிப் பித்தரின்- சொற்கள், இவருக்கு சிறிது கவி பாடும் திறனும் உண்டு. அதையெல்லாம் மறைத்து அவரை பழி கூற நான் விரும்பவில்லை.**

**உண்மையிலேயே தமிழ்நாடு தலைகால் புரியாமல்தான் இயங்குகிறதா? தமிழகம் முழுவதுமே கொலைக்களமாய், வெட்டுக்களமாய், குத்து மேடையாகத்தான் உள்ளதா? "பாரதிப் பித்தர்" கூறியவை உண்மைதானா? உண்மைதான் என்ன? "பித்தரின்" கூற்றுக்கு தங்கள் பதில் என்ன?**

அன்பரே! தங்கள் கேள்வி கேள்வியல்ல. இரண்டு நொந்த உள்ளங்களின் படப் பிடிப்புக்கள். நொந்த இரு பாதி உள்ளங்களின் படப் பிடிப்பு என்றுகூடக் கூறலாம்.

அன்பு மிகுந்த இடத்தில்வேதனை மிகுதி தோன்றும். பற்று மிகுந்த இடத்தில்தான் வெறுப்பு, சீற்றம், கோபம், பகைமை கொந்தளித்து எழும். ஆனால் இது, அறிவு இடையிடையே அலுப்புற்று வேலை செய்ய மறுத்து வேலை நிறுத்தம் செய்யும் நேரம். நொந்த அறிவு ஆறுதல் தேறுதல் பெற்றுப் புத்தூக்கம் பெற முடியாத நேரம்மட்டுமே. நொந்த தம் பொறுமையின் துணையால் உள்ளத்தில் பொறுமை யமைதி உண்டு பண்ணி, அறிவுத் தென்றலைச் சிறிது உலவ விட்டுவிட்டால், மற்ற நொந்த உள்ளத்தின், ஆசிரியர் உள்ளத்தின் நிலையும் தமக்குப் புலப்பட்டுவிடும்.

தமிழ்நாடு ஓர் மட்டமான நாடலல, ஆனால் மட்டமான நாடு ஆகி வருகிறது. உலகிலேயே மிக மோசமான சமூகமல்ல தமிழகம், உச்ச உயர் பண்பாடுடைய சமுதாயம்தான். ஆனால் உலகிலேயே மோசமான சமுதாயமாக ஆகியுள்ளது, ஆகி வருகிறது. ஏட்டில் பழந் தமிழகத்தின் இனிய பண்ணில் இழைந்து, அதற்கிடையே இலக்கியம் பாடத் தலைப்பட்டதும் ஆசிரியர் இடையே திடுமென சாப்பறை ஓசை கேட்டுப் பதைபதைத்துத் துடித்த நிலையைத் தம் வினா, தம் கடிதம் நன்கு படம் பிடித்துக் காட்டுகிறது. ஆனால் நீங்கள் ஆசிரியரைத் தேற்றுங்கள்! முதுகுளத்தூர் மக்களிடையே எழுந்த சாப்பறை தமிழகத்தைப் புதுக்குளத்தூராக்கித் தட்டி எழும்பும் புதுமைப் பறைக்கு ஓர் அறை கூவல் அது நிலையான சாப்பறையுமல்ல, தமிழகத்தின் தனியியக்கத்தால், தமிழகத்தின் தேசிய வாழ்வில் பிறந்த ஒரு சாப்பறையல்ல என்று விளக்குங்கள். தமிழகத்துக்குவெளியிலிருந்து வந்த இரு நோய்களின் கூட்டுச் செயல் துடிப்பு அது—தமிழகத் தேசியக் குருதியில் ஏறிய அயல் பண்பாடுகளென்றும் நஞ்சை அத்தேசியம் தன்னுள் கொண்டுசெரிக்க வைக்கமாட்டாமல் புறந்தள்ளியதால், புறம் நொந்து குருதி கொப்பளித்துத் தெறித்த குருதிப்புண்தான் முதுகுளத்தூர் நிகழ்ச்சி. தமிழ்த் தேசிய இயக்கமாகிய திராவிட இயக்கம், அதன் புத்தின மருத்துவனாகிய திராவிட முன்னேற்றக் கழகம் புண்ணுற்றமட்டுமல்ல, புதுத் தேசியக் குருதி ஓடவிட்டுப் புத்துரமும் புத்தூக்கமும் அளிக்க முன் வந்துள்ளது-முன்வர இருக்கின்றது! பாரதி புத்தர்-பக்தருக்குமட்டுமல்ல, திருவள்ளுவரின் அறிவு மரபினருக்குக்கூட மன நிறைவளிக்கும் முறையில் புதியதொரு தமிழகத்தைப் படைத்துருவாக்க அவ்வியக்கம் கனுக்கண்டு வருகிறது.

பாரதியாரின் தமிழகம்பற்றிய கனவு ஒரு கவிஞர் கனவு. கவிதையுணர்வுடையவர் அதைத் தாமும் அவர் கவிதை வழி நின்று கனுக் காணலாம். அதன் வழி தாமும்நிற்கலாம். ஆனால் தமிழகத்தை அவ்வழி திருப்ப வேண்டுமானால், தமிழர் பண்பாட்டின் வேர் முதல், அவர்கள் சிறப்புக்களின் கரு மூலத்தை மட்டுமன்றி, குறைகளின் கரு மூலத்தையும் காண வேண்டும். பாரதியார் கண்ட அதே சமரசக் கனுவை அறிவார்வத்துடன் இழைய விட்டவர் திரு. வி. கலியாணசுந்தரனார். புத்தர் பிரானே 2500 ஆண்டுகளுக்குமுன் இதே கனுக் கண்டு, கவிதை நனவாக்கப் பெரும் போராட்டமாடியவர். அவர் போர்க்களம் பாரதியார்; திரு. வி. கவின் போர்க்களமாகிய தமிழ்நாடன்று, கங்கை சிந்து வெளியாகியவடநாடு. ஆனால் அவர் கண்ட வெற்றி உலக வெற்றி, இலங்கை பர்மா, சீனு சப்பான் கண்ட வெற்றி—வடநாடு கண்ட வெற்றியன்று. வடநாட்டில் தோன்ற முடிந்த புத்த நெறி வடநாட்டில் தோல்வியே அடைந்தது. புத்த நெறியைத் தோற்றுவித்த பண்பு வடநாட்டுப் பண்பன்று, வடநாட்டில் அன்று ஆரியமெதிர்த்து உதித்தெழுந்த திராவிடப்பண்பே. வடநாட்டு ஆரியப் பண்பு புத்தர் நெறி தோற்றுவித்த பண்பன்று, அழித்த பண்பு. பாரதியார் பண்பையும் புத்தர் பண்பையும் இன்று தமிழகத்தில் கழித்து வருகிறது. ஆனால் புத்தரையும் பாரதியையும், திரு. வி. கவையும் மட்டுமன்றி, இல்லனையர் பண்பின் தலை ஒளியாகிய வள்ளுவரையும் ஈன்று புறந்தந்தும் ஆரியப் பனியால் மூடி மறைத்திரையுட்பட்டதமிழகம் மீண்டும் திராவிட இயக்கத்தால் ஒளி பெற்று வருகின்றது. புத்த நெறிக்கு மட்டுமன்றி பாரதி கனவிற்கும் அது புத்துயிர், புது வாழ்வு ஊட்ட வல்லது!

பாரதி பக்தரும் புத்த பக்தரும் ஆகிய தம் ஆசிரியருடன் இவை பற்றி உசாவி, தமிழகத்தைமட்டுமல்ல, கீழ் திசையையே மாற்றியமைக்கவல்ல சக்திகளுக்குப்பாரதியாரும் புத்தர் பெருமானும் திரு. வி.கவும் உதவமுடியுமேயல்லாமல், முற்றிலும் அதனை இயக்கமுடியாது. உலக நாகரிகத்தின் மூலமாகிய கீழ் திசை நாகரிகம். கீழ் திசை நாகரிகத்தின் கரு முதலாகிய திராவிட தமிழின நாகரிகம், ஆகியவற்றினை வரலாற்றுக் கண்ணுடன் நோக்கி, அவற்றின் பேய்ப் பண்பிலிருந்து குற்றம் குறையறிந்து மருத்துவம், உயிரியக்கம் காணும் தமிழர் மறுமலர்ச்சிக் கட்சியாகிய திராவிட முன்னேற்றக் கழகம் ஒன்றே தமிழகத்தின் குறைகளை உணர்ந்து நீக்கி, குணம் பெருக்குமென்று கண்டு, ஆசிரியருக்கும் அறிவிக்க வேண்டுகிறேன்.

சுருக்கமாகக் கூறுவதானல், திராவிடர் தீங்குகளுக்கெல்லாம் அடிப்படைக் காரணம் தன்னுரிமை (சுதந்திரம்) இன்மையே. அவர்கள் வாழ்வு சரிசமக் குடியாட்சி அடிப்படையில் அமைந்தது. வீரமும் சாதலும் அதற்குரிய செங்கல்கள், இணைப்புச் சுண்ணங்கள். அறிவு அதன் வாயில். கலைகள் அதன் கூடகோபுரங்கள். அடிப்படைச் சுதந்திரம்இல்லா நிலையில், சரி சமத்துவமே பொட்டிபூசல்களாகி, வீரம் வீம்புரை, கொள்ளை கொலைக்குத் தூண்டுதலாகிகாதல்கட்டற்றதான்தோன்றித்தனமாகி, அறிவு நயவஞ்சகமாகி, கலைகள் ஏமாற்று வித்தைகளாகியுள்ளன. பூஞ்சோலை பூக்காடாகி, பூக்காடு முட்காடாகி வருகிறது. பழத் தோட்டம் பாம்புத் தோட்டமாகி, தோட்டக்காரன் குடிசை கொள்ளைக்காரர் மூலதளமாகி வருகிறது. இந்நிலை மாற்ற ஒரே வழி திராவிடத் தேசியம் வளர்த்து, திராவிடக் குடியாட்சிப் பண்பைத் திராவிட இலக்கியப் பண் துணை கொண்டே, திராவிட வரலாறாகிய யாழ்குழல் மீட்டி எழுப்புவதே, அடையச் செய்து வருவது. ★



ஜூபிடர் சோமு அவர்களின் குமாரிகளான திருமதி சுலோசனவும், திருமதி சரோஜாவும் பிப்ரவரி 8-ம் தேதி மேல்நாட்டுக்குப் பயணமானார்கள்.
வலமிருந்து:—சுலோசன, வாஞ்சி நாயகி, பாலாம்பாள், ராதா, சாருபாலா, சரோஜா.

198376



# வெண்பாப் போட்டி

## 11. செத்துப்போ ஞனே சிவன்?

★ அப்பர், திருஞானம், அன்புள்ள சுந்தரன்
தப்பிலாமா ணிக்கன் தனித்தமிழைச்-செப்பாமல்
செத்த வடமொழியால் செய்கின்ருர் பூசையெனச்
செத்துப்போ ஞனே சிவன்?

—வ. உமா, தஞ்சை.

❁

வேத புராணங்கள் வேள்விச் சடங்கெல்லாம்
ஆதர வற்றே அழிந்ததெனும்—வேதனையில்
பித்தம் பிடித்தலைந்து பேய்களுடன் கூத்தாடிச்
செத்துப்போ ஞனே சிவன்?

—பி. ஆர். சின்னகிருஷ்ணசாமி, அநுப்பபட்டி.

❁

பெண்டாட்டி யோகறுப்பு; பிள்ளையோ பெண்தேடித்
திண்டாடு கின்ருன் தெருவதனில்—தொண்டர்கள்
"பித்த"னென் றேதினமும் பேசுகின்ருர் என்றெண்ணிச்
செத்துப்போ ஞனே சிவன்?

—தொல்காப்பியன், அகரப்பேட்டை.

❁

ஏங்கியழும் பிள்ளையினை ஏனென்று கேட்காமல்
தூங்க விழைந்திடுமோ தாயுள்ளம்?—ஏங்கியிங்கே
கத்துகின்ருர் பட்டினியால்; காதடைத்துக் கண்மூடிச்
செத்துப்போ ஞனே சிவன்?

—கு. சீத்தாராமன், பனப்பாக்கம்.

❁

பார்வதியும் கங்கையும், பார்மீதில் வேருெருவன்
சேர்க்கையினுல் விட்டுப் பிரிந்தோட—நேர்ந்ததன்பின்,
கொற்றைவார் செஞ்சடையி(ல்) ஈரோடு பேன்பிடித்த(ச்)
செத்துப்போ ஞனே சிவன்?

—சிந்தாமணி, கருப்பட்டிபாளையம்.

❁

நாத்திகரே நல்லவர்கள்! அல்லரெனில் அச்சிவன்தான்
ஆத்திரத்தால் மூண்டெழுந்தே அக்கினியால்—தீய்த்திருப்பான்
வித்தகத்தைப் பேசிடுவோர் காணுமல் ஐயகோ!
செத்துப்போ ஞனே சிவன்.

—கடாரங்கொண்டான், தேவகோட்டை.

❁

நக்கீரன் நேர்மையா ல் நாணி மனம்வெதும்பித்
தக்காரைக் கண்டு தவித்தானே?—தென்னவரின்
சத்துமிகு கொள்கையைச் சாடப் பயந்தோடிச்
செத்துப்போ ஞனே சிவன்?

—ச. கு. சீத்தா, கலிதீர்த்தாள்குப்பம்.

❁

சாதிக் கொடுமைகளைச் சற்றும் அகற்ருமல்
மோதிக் கொலையுண்ட முத்தமிழர்—வேதனைக்குப்
பித்தன்தான், செய்த பிழையே பொருட்டாகச்
செத்துப்போ ஞனே சிவன்?

—ஆர். கலைச்செல்வன், சோழபுரம்.

❁

நாட்டினில் நால்வருணம் நன்குலவ விட்டுவிட்(டு)
ஏட்டில் சிவனுரின் ஏவலென—நாட்டிட்டார்
மாத்தமிழ் நாட்டில் மடமை பரவியதால்
செத்துப்போ ஞனே சிவன்?

—கோத்தகிரி, நீலி.

காலமெலாம் நம்பிக் கதியவனே என்றிருப்போர்
ஓலமிடும் துன்பநிலை ஓய்வதில்லை—ஞாலமதில்
நித்தம்சான் ருேர்நலிய நீர்மையிலார் மேன்மையுறச்
செத்துப்போ ஞனே சிவன்?

—ந. ஜாபர், சித்தயங்கோட்டை.

❁

பொய்மை அகம்பாவம் பொல்லாங்குத் தீவினையோர்
உய்யும் நிலைகண்(டு) உளம்வாடி—மெய்வருந்திப்
பித்தாகிப் பேயாகிப் பார்மீதில் வாழாமல்
செத்துப்போ ஞனே சிவன்?

—பொய்யாமொழி, கரந்தை.

❁

கல்லிலென்பார், தெய்வம் குளத்திலென்பார், மண்ணின்மேல்
புல்லிலென்பார், இன்னும் புனலிலென்பார் -நல்தமிழா!
சத்தி மணந்ததினுல் சாதியின் பூசலினுல்
செத்துப்போ ஞனே சிவன்?

—செ. வெற்றிமன்னன், நாமக்கல்.

❁

சீரிழந்த வாழ்வைச் சிவநேயர் கொண்டதுமேன்?
நேரிழந்து கோயில்கள் நிற்பதுமேன்! —பாரினிலே
உத்தமர் வீழ உதவார் உயருவதேன்?
செத்துப்போ ஞனே சிவன்?

—சோழன், திருப்பனந்தாள்.

❁

'ஆதிசிவன் பெற்ருன்; அகத்தியர்க்குத் தான்மொழிந்தான்'
வேதம் இதுவாயின் வண்டமிழ்க்குத்—தீதுதரும்
சத்தற்ற இந்திதனைச் சாடுதற்கேன் தோன்றவில்லை
செத்துப்போ ஞனே சிவன்?

—அம்பிகாபதி, விழுப்புரம்.

❁

பார்த்துப் படியளக்கும் பார்வதியா டானிருந்தும்
கூர்ந்த பசிதீர்க்கக் கூடாமல்—ஊரிரந்து
பத்துப்பே ரேசும் பழிப்பஞ்சி எங்கோடிச்
செத்துப்போ ஞனே சிவன்?

—வ. சுந்தரராசன், கேர்பெட்டாத்தோட்டம்.

❁

கந்தையொடு கால்வயிற்றுக் கஞ்சிக்கே காலமெல்லாம்
நைந்து வருந்துகின்ருர் நம்மவர்கள் —பைந்தொடியே!
கத்தும் குரல்கேட்கா கைலைப் பதியதனிற்
செத்துப்போ ஞனே சிவன்?

—பொ. அண்ணுவி, திருச்சி.

❁

வானம் வெளுக்க வயற்காடும் காய்ந்ததய்யா!
தானம் தவமிரண்டும் நீங்கினவே-காணுங்கால்
சத்தான சோறின்றி சாண்வயிறு ஒட்டியதே
செத்துப்போ ஞனே சிவன்?

—ந. செனுர்த்தனன், அரக்கோணம்.

❁

பிள்ளைக் கறிதின்னப் பேராசை கொண்டவராம்
அள்ளி விடமுண்ட ஆண்டவராம்-குள்ளரது
சத்தில்லாப் பொய்க்கதைகள் சாதித்த குற்றத்தால்
செத்துப்போ ஞனே சிவன்?

—சி. பி. சாமி, திருப்பத்தூர்.

❁

அன்பேநம் வாழ்வினை ஆண்டவன் முன்கொண்டோம்
பின்பிரிந்தோம் பேய்ச்சாதி வேற்றுமையால்-என்சொல்வேன்!
சத்திழந்த நம்வாழ்வைச் சீர்செய்து வைக்காமல்
செத்துப்போ ஞனே சிவன்?

—கலைக்கண்ணன், சென்னை-1.

★ பரிசுபெற்ற வெண்பா—பரிசு, ஓராண்டு "தென்றல்" சந்தா.

"தென்றல்"

(உள் நாடு)

| | | |
|---|---|---|
| ஆண்டுச் சந்தா | ரூ. | 7-50 |
| ஆறு மாதம் | ரூ. | 3-75 |

(வெளி நாடு)

| | | |
|---|---|---|
| ஆண்டுச் சந்தா | ரூ. | 10-50 |
| ஆறு மாதம் | ரூ. | 5-25 |

ராஜா பார்லி பிஸ்கட்ஸ்
குழந்தைகளுக்கு சிறந்த ஆகாரம்.
PROP: செ. தங்குபிள்ளை, 11 B, திண்டுக்கல்ரோடு, மதுரை

ஆசிரியர்: கண்ணதாசன். அச்சிடுபவர், வெளியிடுபவர்: சுப. அருணுசலம், ஏ. எல். எஸ். அச்சகம், 2/127, மவுண்ட்ரோடு, சென்னை-6. தமிழ்நாடு